# செந்தமிழ்

தொகுதி 83 டிசம்பர் 89 பகுதி 4

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1

ஆசிரியர் : என். எஸ். முத்துமலைச்சாமி, பி.ஏ., பி.எல்.,

# குறவஞ்சி இலக்கிய வகைமை வளர்ச்சி

பேராசிரியர் டாக்டர்
கதிர். மகாதேவன்

## பாடுபொருளும் பற்றுக்கோடும்

கவிதைகளில் பல்வேறு வகைகள் உருவாவதற்குப் பல காரணங்கள் உண்டு. எனவே, ஒரு கவிதையின் பாடுபொருள் எங்குப் பற்றுக்கோடு கொண்டு, எத்தகைய மாற்றங்களும் ஏற்றங்களும் பெற்றுச் சமுதாயச் சூழலில் தோய்ந்த முழுமையான வளர்ச்சி பெறுகின்றது என்பதை ஆய்ந்து காணுங்கால், பல நுண்மைகளும் உண்மைகளும் தெளிவாகின்றன. இதனைக் குறவஞ்சி இலக்கிய வகைமை கொண்டு ஒப்பீட்டு நோக்கில் காண்பது இக் கட்டுரையின் செல்நெறி ஆகும்.

## 'குறவஞ்சி' தோன்றிய மண் எது?

சில வகை மண்ணிற்குச் சில மரங்களும் மலர்களும் தழைத்துப் பூத்துக் குலுங்குவது போலத் தமிழில் முதன்முதலில் தோன்றிய 'குறவஞ்சி' எனும் இலக்கிய வகை, பிற திராவிட மொழிகளிலும் வடமொழியிலும் பரவியுள்ளமை அறியத்தக்கது.

ஓர் இலக்கிய வகை சீர்பெற்றுச் செம்மைநிலை அடைவதற்கு மூவகை வளர்நிலைகள் காணப்படுகின்றன. முதலாவதாகப் பாடல்களில் அடிக்கருத்தாக (theme) அமையும் சமுதாயச் சூழல்; இரண்டாவதாக இவ்வடிக்கருத்துக்கள் இலக்கிய வகைமையாக வளர்நிலை பெறும் தொடர்நிலை; மூன்றாவதாக வகைமை வகையாக வளம்பெறும் உயர்நிலை. இம்மூன்று வளர்நிலைகளும் ஒரு மொழி இலக்கியத்தில் தொடர்ச்சி பெற்று வளர்நிலைகளைக் கணிப்பதற்கு ஏற்றவாறு அமைந்திருக்குமானால், அவ்விலக்கிய வகை அம் மலர்ந்த மண்ணிற்குச் சொந்தமானது எனலாம்.

குறிஞ்சி நிலத்தின் வித்து

பொதுவாக நிலப்பகுதியில் மலைப்பகுதி, நிலவியல் கால வரையறையில் முதலில் தோன்றியதாகும். தமிழ்நாட்டில் குறிஞ்சி நிலத்தின் சிறப்பினைச் சங்க இலக்கியம் பயின்றோர் நன்கு அறிவர்.

குன்றத்தில் வதிவோர் குன்றவர் என்பதைக் குன்றம் பூதனார், ''குறிஞ்சிக் குன்றவர்'' என்று தாம் பாடிய பரி பாடற்றொடரில் உணர்த்துவர்.

வெறிபாடிய காரணத்தால் வெறிபாடிய காமக்கண்ணியார் போன்று குறுந்தொகையில் குறிபாடிச் சிறந்த பெண்பாற் புலவரைக் குறியிறையார் (394) என்றும், நற்றிணையில் (357) குறியெயின் என்றும் குறிக்கப்பெறும் பெயர்களால் இவர்கள் குறவர் குலத்தைச் சார்ந்தவர் என்பது புலப்படும். குறியிறையார் என்பவர் ''குறமக ளீன்ற குறியிறைப் புதல்வரோடு'' எனத் தலைமகனாகக் குறக்குலத்தோனைக் குறித்திருத்தலாற் குறக்குலஞ் சார்ந்தவர் என்பது போதரும்.

குறம்+வஞ்சி என்பது குறவஞ்சி; உவமை ஆகுபெயராய் வஞ்சிக்கொடி போன்ற குறப்பெண் என்று பொருள்படும். குறப் பெண் எனில், குறம் என்னுங் குலத்தைச் சார்ந்தவள்; அன்றிக் குறம் என்னுங் குறி கூறுகின்றவளாகவும் கொள்ளலாம். தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளிலும் குறவஞ்சி உண்டு. ஆயின், தமிழைப் போல அம்மொழிகளில் 'குறவஞ்சி' தனி இலக்கிய வகையாக மலரவில்லை. தெலுங்கில் குற+அஞ்சி என்று பிரித்துக் குறவனைக் குறிக்கும் என்ப. சங்கத் தமிழில் குறவர் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. புறநானூற்றில் 157-ஆம் பாடலைப் பாடியவர் 'குறமகள் இளவெயினி' எனும் பெண்பாற் புலவராவார். இவர் குறவர் பெருமகனைப்பாடியிருக்கின்றமையானும் குறமகள் என்ற அடைபெற்றிருக்கின்றமையானும் அக்குலத்தைச் சார்ந்தவராவர் என்பதில் ஐயமில்லை.

மேலும், சங்க இலக்கியத்துள் குறிகூறுந் துறை கொண்ட பாடல்கள் சில குறுந்தொகையுள் உள்ளன. குறிகூறுகின்ற இப் பெண்டிர் அகவி விளித்துப் பாடுவர் என்பதும், குன்றம் பாடுபவர்

என்பதும், சிறுகோல் கையில் வைத்திருப்பர் என்பதும், ''குன்றம் பாடும் நுண்கோல் அகவுநர்'' (அகநானூறு. 208) எனவும், 'வெண் கடைச் சிறுகோல் அகவன் மகளிர்'' (குறுந் 298) எனவும், ''நுணங்குகட் சிறுகோல் வணங்கிறை மகளிரோடு அகவுநர்'', (அகம். 97) எனவும் வரும் தொடர்களால் அறியலாம்.

வகைமை (Theme) : வகை (Genre)

பதினேழாம் நூற்றாண்டில் குறவஞ்சி இலக்கிய வகையாக மலர்ந்துள்ள 'குற்றாலக் குறவஞ்சி', குறத்தியை வருணிக்கும் பாங்கு இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

''கூடல்வளைக் கரமசைய மாத்திரைக்கோ லேந்தி'' என்று கூறுதல் காண்க.

இதைப்போன்றே குறிகூறும் முறையில் நெல்லைப் பரப்பிக் கட்டுப் பார்ப்பர் என்பதனைச் சங்க இலக்கியம்,

''செம்முது பெண்டிரோடு நெல்முன் நிறீஇ'' - நற். 288

என்று கூறும்.

குற்றாலக் குறவஞ்சியில்,

''நிறைநாழி யளந்து வைப்பாய்
இறையோனைக் கரங்கு விப்பாய்''

என நெல்லளந்து வைக்குமாறு கூறுவது கட்டுப்பார்த்தலைக் குறிப்பது தெளிவாகும்.

பல்வேறு தெய்வம் பரவுவர் என்பது,

''... ...
அகலு ளாங்க ணறியுநர் வினாயும்
பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல் லுருவிற் கடவுட் பேணி''

என்னும் குறிஞ்சிப்பாட்டு வரிகள் உணர்த்தும்.

குற்றாலக் குறவஞ்சியோ பல்வேறு தெய்வங்களைக் குறத்தி வாழ்த்தி வணங்குவதாகக் கூறும். விநாயகரை முதலாகக் கொண்டு முருகன், வள்ளி, காளி, வைரவர், கருப்பர், துர்க்கை, பிடாரி போன்றோரை வாழ்த்துவது காணலாம். ''பன்னிருகை வேல் வாங்க ...'',

''அழகுசந் நிதிவாழ் அம்பல விநாயகா
செந்தில்வாழ் முருகா, செங்கண்மால் மருகா"

என்றும் அகவிப் பரவும் முறை தெளிவாகிறது.

மேலும் திருமுருகாற்றுப்படை நாட்டையும் நகரையும் வாழ்த்தும் முறையை,

''நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி
... ... ... ... ... ...
குருதிச் செந்தினைப் பரப்பிக் குறமகள்"

என்று விளக்கும்.

குற்றாலக் குறவஞ்சியில் வரும் வசந்தவல்லி குறத்தியை நோக்கிச் சொந்தமலை எந்தமலை யந்தமலை வளமெனக்குச் சொல்லென்று கேட்க,

''வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்'' எனத் தொடங்கி, குற்றாலத்தை உருக்காட்சியாய்ச் சொல்லோ வியமாய்க் கண்முன் நிறுத்துவது படித்தும் கண்டும் மகிழத்தக்கது. இடைக்கால இலக்கியங்களில் குறிபார்க்கும் மகளிர் 'கட்டுவித்தி'. 'கட்டுவிச்சி', 'கட்டறி மகடூஉ' என்னும் பெயர்களால் குறிக்கப் பெறுகின்றனர். கட்டுவித்தி என்ற சொல்லை முதன்முதலில் மணிவாசகர் கையாளுகின்றனர். (திருக்கோவை : 283-285) நம்மாழ்வார் 'கட்டுவிச்சி' என்ற சொல்லைக் கையாண்டுள்ளார். திருமங்கையாழ்வார் பாடிய சிறிய திருமடலில் கட்டுப் பார்க்கும் முறை கூறப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் குறிகூறும் மகளிர் முதுவாய்ப் பெண்டிர் (அகம் பா. 22) என்றும், செம்முது பெண்டிர் (நற். 288) என்றும் நரைத்த மூதாட்டியராய்க் குறிக்கப் பெறு கின்றனர். முதன்முதலில் திருமங்கையாழ்வார் திருதுரைச் செல்வி யாம் செம்முது பெண்டிரைத் திருநிறை இளம் செல்வியாக்கி, ''வஞ்சிக்கொடி போன்ற பெண்'' என்று பயன்படுத்தியுள்ளார். இதுவே பிற்காலத்தில் குறவஞ்சி என இலக்கிய உருவாக வழி கோலியது போலும்!

'குறத்திப் பாட்டு' கூறும் இலக்கணம்

'குறத்திப் பாட்டு' என்னும் இலக்கிய வகை தமிழில்

கிடைக்கப்பெறவில்லை. ஆனால் இத்தகைய இலக்கிய வகைக்குப் பன்னிரு பாட்டியல் இலக்கணம் வகுக்கிறது.

''இறப்பு நிகழ்வெதிர் வென்றமுக் காலமும்
திறப்பட வுரைப்பது குறத்திப் பாட்டே
(பன்னிருபாட்டியல், இனவியல் நூ. 165)

இங்கு இலக்கிய வகைமை வளர்ச்சியின் தொடர்ச்சியைக் காண்பதற்கு மலையாளம், கன்னடம், தெலுங்கு, தமிழ்நாட்டில் நிலவும் சமசுகிருதம் ஆகிய மொழி இலக்கியங்களை ஒப்புநோக்கு தல் இன்றியமையாததாகின்றது.

**ஒப்பு நோக்கில் குறவஞ்சி**
**மலையாளம்**

மலையாளத்தில் 'குறவஞ்சி' என்ற தலைப்பில் பாடல்கள் செவ்வியல் இலக்கியத்தில் இடம்பெறவில்லை. ஆனால், குறத்திப் பாடல்கள் இன்றும் ஓணம் விழா நாட்களில் நாட்டுப்புறப்பாடல் களாகக் குறவன் குறத்தியரால் பாடப்படுகின்றன. அவர்கள் பேசும் மொழி மலையாளமும் தமிழும் கலந்த மொழியாகக் காணப் படுகின்றது. மலையாளத்தில் 'வஞ்சி' என்ற சொல் இருபொருளில் வழங்குகின்றது. ஒன்று, 'மகளிர்' என்பதாகும். பிறிதொரு பொருள் 'படகு' என்பதாகும். 'வஞ்சிநாடு' எனின் படகுகள் நிறைந்த நாடு என்பது பொருள் ஆகும். குறத்தி ஆட்டம் என்று இலக்குமியும் பார்வதியும் வாதம் புரியும் ஆட்டம் அங்கு நடை பெறுவது குறிப்பிடத்தக்கது.

கன்னடம், தெலுங்கு ஆகிய பண்பட்ட திராவிட மொழி களில் 'குறவஞ்சி' என்ற தலைப்பிலே ஏட்டுப்புற இலக்கியத்தில் பாடல்கள் காணப்படுவது அறிவதற்குரியது. ஆயின் மலையாளத் தில் 'குறவஞ்சி' என்ற தலைப்பில் ஏட்டுப்புற இலக்கியத்தில் பாடுபொருள் காணப்படாததற்குக் காரணம், மலையாளமும் தமி ழும் பலகாலம் பெரிதும் வேறுபாடின்றி நிலவிய நிலையாகலாம் மேலும், மலையாள இலக்கியம் மணிப்பிரவாள நடையை மேற் கொண்டு, சமசுகிருத இலக்கியங்களின் தாக்கம் பெற்று வளர்ந்த காரணத்தால், குறவன் குறத்திப் பாடல்கள் என்று நாட்டுப்புற அளவிலேயே நின்று, ஏட்டுப்புறத்தில் பாடுபொருள் என்ற நிலை பெறாமல் போயிற்று என்று கூறுவது சாலப் பொருந்தும் என்று டாக்டர் பி. சி. ராய் கூறுவர்.

'குறவஞ்சி' மூலம் தமிழ் — கொறவஞ்சி<கன்னடம்
கன்னடம்

கன்னட இலக்கியத்தில் "கொறவஞ்சி" என்ற தலைப்பில் செவ்வியல் இலக்கியப் பாடல்கள் உண்டு. 'சந்திரசேகர கம்பாரா' எனும் பெரும்புலவர் தம் நூலாகிய," உத்ர கர்நாடக ஜானபதரங்க பூமியில், இப்பாடல்கள் பற்றிக் குறிப்பிடும்போது, இவை பெரிதும் தமிழின் தாக்கம் பெற்றவை என்று கூறுவர். கன்னடத்தில் 'தொட்டாட்டா' என்றும், 'சன்னாட்டா' என்றும் இருவகை ஆட்டங்கள் உண்டு. 'தொட்டாட்டா' எனின் பெரிய ஆட்டம், சன்னாட்டா எனின் சிறிய ஆட்டம் என்று பொருள்படும். 'யக்ஷ கானம்' என்ற நாட்டுப்புற நடையமைந்த "கிருஷ்ண பாரிஜாதா" சன்னாட்டா (சிறிய ஆட்டம்) என்ற பிரிவைச் சாரும். அபராள தம்மன்னா எழுதிய "கிருஷ்ண பாரிஜாதா" எனும் நாட்டுப்புற நாடகத்தில் குறவஞ்சிப் பாடல் இடம்பெறுகிறது. இந்நாடகத்தில்கிருட்டிணன் உருக்குமணியுடன் இருக்கையில் நாரதர்பாரிசாத மலரைக் கொண்டு வந்து கிருட்டிணனிடம் தருகிறார். பாரிசாத மலர் தெய்வதருக்களாகிய ஐந்தில் ஒன்று; பாற்கடலில் பிறந்தது; நினைத்ததைத் தரவல்லது. கிருட்டிணன் பாரிசாத மலரைத் தன்னுடன் அவ்வமயம் அமர்ந்திருந்த உருக்குமணியிடம் தருகிறார். நாரதர் வழக்கம்போலத் தம் பணியைச் செய்யத் தவறவில்லை. கிருட்டிணனின் இரண்டாம் மனைவியாகிய சத்தியபாமையிடம் சென்று பாரிசாத மலரைத் தாம் கொண்டுவந்து கிருட்டிணனிடம் கொடுக்க, அவர் அதை உருக்குமணியிடம் தந்துவிட்டதாகக் கூறிச் சென்றுவிடுகிறார். இதனால், சத்தியபாமை ஊடல் கொள்கிறாள். இவ்வூடலைத் தவிர்க்க குறிசொல்லும் குறத்தியாகக் கிருட்டிணன் வேடமணிந்து வருகிறார். குறத்தியாக வந்த கிருட்டிணன் சத்திய பாமைக்குப் பாரிசாத மலரைக் கிருட்டிணன் அவள்மீது கொண்ட காதல் பரிசாக அளிப்பார் என்று கூறிச் சத்தியபாமை கொண்ட ஊடலைத் தவிர்ப்பதில் வெற்றி கொள்கிறார். அபராள தம்மன்னா 'குறவஞ்சி' இலக்கிய வகையைத் தமிழ் மண்ணிலிருந்து கன்னடத்திற்கு வந்ததாக உரைப்பர்.

பதினெட்டாம் நூற்றாண்டில் 'அபராள தம்மன்னா' குடகூடதம்மன்னா ஆகியோரால்"கிருஷ்ண பாரிஜாதா" நாடகமேடை ஏற்றப்பட்டுப் புகழடைந்தது. கிருட்டிண பக்தியே இந்நாடகத்தின் மையநோக்காகும். இந்நாடகத்தில் வரும் குறத்தி, கருப்புப் புடைவையை மகராட்டிரப் பெண்டிர் போலக் கச்சைக் கட்டாகக்

கட்டி முந்தானையை இடுப்பில் சொருகி இருப்பாள்; தலைமுடியைப் பரப்பிக் குஞ்சமாலை அணிந்து வருவாள்; கூடை சுமந்து நடைபோடுவாள்; அக்கூடையில் அவள் வணங்கும் தேவி, சிம்பி, கவடை ஆகியவை இருக்கும். காலில் சலங்கை அணிந்திருப்பாள்; அவள் மேனி கறுப்பாக இருக்கும் என்ற வருணனைகள் கன்னடக் குறவஞ்சி நாடக இலக்கியத்தில் காணப்படுகின்றன.

**'யக்ஷகானம்' — குறவஞ்சியா ? ... விடை கூறும் தெலுங்கு ...**

தெலுங்கு இலக்கியத்தில் குறவஞ்சி நாடகங்கள் காணப்படுகின்றன. இவை தமிழைப் போலத் தனிவகையாகக் கருதப் படாமல், பெரிதும் யக்ஷகானத்தோடு தொடர்புபடுத்தியே பேசப் பட்டு வந்துள்ளன. குறத்தி பாத்திரமாக எந்தப் பாடலில் வந்தாலும் அப்பாடல், 'கொறவஞ்சி' என்று அழைக்கப்படும் வழக்கம் தெலுங்கில் காணப்படுகின்றது. 'கொறவஞ்சி' என்ற சொல்லை முதன்முதலாக அய்யலராஜு ராமபத்ருடு (கி.பி. 16 நூ) என்ற கவிஞர் த்மது 'ராமாப்யுதயமு' என்ற நூலில் கையாண்டுள்ளார். குறத்தி, குறவதா, குறவஞ்சி, சிங்கி போன்ற பெயர்கள் தமிழைப் போலத் தெலுங்கு நாடகங்களிலும் இடம்பெற்றுள்ளன.

தெலுங்கில் குறவஞ்சி நாடகம் கி.பி. 16ஆம் நூற்றாண்டிலிருந்து காணப்படுகிறது. குறவஞ்சி நாடகத்தில் மூன்றுவிதமான கதையமைப்பு காணப்படுகிறது.

1. குறவன் குறத்தி காதலை மட்டுமே கூறுகின்ற நாடகங்கள் (எ-கா) சஹாஜியின் 'கிராதி விலாசம்'
2. குறத்தி வேடத்தில் கதைத் தலைவன் கதைத்தலைவியைச் சந்தித்து அவளது கைரேகைகளைப் பார்த்து அவளுக்குத் தகுந்த கணவன் கிடைப்பான் எனக் குறி கூறுதல்
   (எ-கா) மெலட்டூர் ராமசாஸ்திரியின் சீதாகல்யாணம்
3. மூலக்கதையோடு தொடர்பில்லாமல் துணையாக அமைந்து குறத்தி, தலைவிக்குக் குறி கூறுவது. இது தமிழ்க் குறவஞ்சி நாடகங்களின் கதையமைப்பைப் போன்று அமைந்துள்ளது (எ-கா) பசுபுலேடி ரங்கராஜம்மாவின் "மன்னர்தாஸ் விலாசமு"

இக்குறவஞ்சி நாடகங்கள் அனைத்தும் தென்னகத் தெலுங்கு இலக்கியங்களைச் சார்ந்தவையே.

மைசூர் மன்னன் கண்டீரவராசு ஆந்திர கொறவஞ்சி, பிரகிருத கொறவஞ்சி, கன்னட கொறவஞ்சி, திகுல் குறவஞ்சி, (தமிழ்க் குறவஞ்சி) ஆகிய நான்குவகையான குறவஞ்சிகளை இணைத்துக் 'குறவஞ்சி கட்லே' என்ற பெயரில் ஒரே இலக்கியமாகப் படைத்துள்ளார். (தெலுங்கு இலக்கிய வரலாறு பக். 157-159.) சமசுகிருத இலக்கியத்தில் குறவஞ்சியைக் காண்பதற்கு முன், சமசுகிருத மொழியில் குறவஞ்சி தோன்றிய சூழலை ஆராய்வோம். தஞ்சையை ஆண்டுவந்த மராத்திய மன்னர்கள் தமிழ்ப் புலவர்களுக்கும் சமஸ்கிருதப் புலவர்களுக்கும் பெரும் ஆதரவு நல்கினர். அம்மன்னர்கள் மீது குறவஞ்சி இலக்கியங்கள் பாடப்பட்டன. ஏகோஜி, சஹாஜி, துளசாஜி, சரபோஜி, சிவாஜி எனப் பல தலைமுறைகள் குறவஞ்சி நூல்களால் பாடப்பெறும் சிறப்பினைப் பெற்றனர்.

திருக்குற்றாலக்குறவஞ்சி தோன்று முன்னரே கும்பேசர் குறவஞ்சி, தியாகேசர் குறவஞ்சி, சகசிராசன் குறவஞ்சி ஆகியன, தமிழில் தோன்றியுள்ளன.

கும்பேசர் குறவஞ்சி, "இரவலர் தருவான்றஞ்சை யேகோசிராசன்" (பா. 6) என்று சுட்டுகிறது. இதனால் இந்நூலாசிரியரான பாபநாச முதலியார், தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னரான ஏகோஜி காலத்தவர் என்பது விளங்கும். தஞ்சையைக் கடைசியாக ஆட்சிபுரிந்த செங்கமலதாசனைத் துரத்தி நாட்டைக் கைப்பற்றி ஆண்ட மராத்திய மன்னன் ஏகோஜி (கி. பி. 1676-1683) என மதுரை நாயக்கர் வரலாறு கூறுகிறது.

ஏகோஜிக்குப் பின்னர் தஞ்சையை ஆண்டவர் இரண்டாம் சஹாஜி (கி. பி. 1684-1712). அவர்மீது முத்துக்கவிராயர் என்னும் புலவர் 'சகசி மன்னன்மீது குறவஞ்சியைப் படைத்துள்ளார். அது யக்ஷகானம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. யக்ஷகானம் என்பதற்கேற்பத் தெருக்கூத்து அமைப்பிலேயே இக்குறவஞ்சி அமைந்துள்ளது. தியாகேசர் குறவஞ்சியும் இரண்டாம் சஹாஜி மன்னன் காலத்தில்தான் பாடப்பெற்றிருத்தல் வேண்டும் என்று கருதப்

படுகிறது. குறவஞ்சியை 'யக்ஷகானம்' என்றும் அழைப்பதோ, யக்ஷ கானம் வழிவந்த குறவஞ்சி என்று உரைப்பதோ தவறாகும். தெலுங்கு மன்னர்கள் மனம் மகிழ, குறவஞ்சியை 'யக்ஷகானம்' என்று குறிப்பட்டனர்.

இரண்டாம் சஹாஜி மன்னன் காலத்திலேயே பிறிதொரு குறவஞ்சி இயற்றப்பட்டிருக்கிறது. இதுதான் சமசுகிருத மொழி யில் காணப்படும் குறவஞ்சியாகும்.

**'குறவஞ்சி' வகையின், உண்மை உரைக்கும் சமசுகிருத இலக்கியம் ...**

சமசுகிருதச் செவ்வியல் இலக்கியத்தில் குறவஞ்சி இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும், தஞ்சாவூரை ஆண்ட இரண்டாவது சஹாஜி (கி. பி. 1684-1710) எனும் மராத்திய மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு "மோகினி விலாச குறவஞ்சி" எனும் நூல் சமசுகிருதத்தில் எழுதப்பட்டுள்ளது "சப்தரிஷி" எனப் பெயரிய தமிழர் இந்நூலினை எழுதியுள்ளார். லால்குடி அருகில் உள்ள கடவுளின் பெயர் சப்தரிஷி. எனவே இப்புலவரும் இப்பெயரைச் சூட்டிக் கொண்டவர் போலும்! இந்நூல் அச்சேற்றம் பெற்றுள்ளது.

பாட்டுடைத் தலைவனாகிய சஹாஜி மன்னன் உலா வரும் போது, காந்திமதி, மன்னன்மீது மையல் கொண்டு தன் கட லன்ன காதல் உணர்வைத் தோழியிடம் வெளிப்படுத்துகிறாள். தலைவியின் மன ஏக்கத்தை அறிந்த தோழி, குறத்தியை அழைத் துக் குறிசொல்ல வேண்டுகிறாள். குறத்தி குறி சொல்லும் போது இம்மாலையே மன்னன் நின்னிடம் வந்து மாலையணி வித்து நின் மனக்குறையைத் தீர்ப்பான் என்கிறாள். இறுதியில் குறவன் வருகிறான்; குறத்தியிடம் காதல் கொள்ள, பாடல் மங்கல மாக முடிகிறது.

**சமசுகிருத மொழியில் தமிழ் யாப்பு!**

'மோகினி விலாச குறவஞ்சி' எனும் இச்சமசுகிருத குற வஞ்சி நாட்டொருமைப்பாட்டிற்கு எவ்வாறு இலக்கியத்தில் வித்திடலாம் என்பதைச் சுட்டிக்காட்டி வெற்றிபெறுகிறது என

லாம். ஒரு மொழியின் யாப்பு அம்மொழிக்கு மட்டும் சொந்தமன்று; ஒரு மொழிக்குரிய யாப்பமைப்பினை எந்தப் பிற மொழியினரும் கையாளலாம் என்பதை 'மோகினி விலாச குறவஞ்சி' மெய்ப்பிக்கின்றது. இந்நூலின்கண் தமிழ்மொழியில் காணப்படுகின்ற அறுசீர் விருத்தம், எண்சீர் விருத்தம், வெண்பா ஆகிய பாவகைகள் சமசுகிருதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மொழியமைப்பே சமசுகிருதமும் தமிழும் கலந்த நடையாக உளது. தெலுங்கிலும் ஒரு பாட்டு உண்டு. குறத்திப் பேச்சில் கொச்சைத் தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப் படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இந்நூல் எழுந்த காலத்தில் செஞ்சியை வீரசிவாஜியின் மைந்தன் ஆண்டுவந்தான் என்பதும், மொகலாயர் படையெடுப்பின் போது அவன் சஹாஜியின் உதவியை நாடினான் என்பதும் இந் நூலில் வரலாற்றுக் குறிப்பாகக் காணப்படுகின்றது. மேலும் இந் நூல் பல்லவி, அனுபல்லவி, சரணம் போன்ற கருநாடக இசைக் கூறுகளைப் பயன்படுத்துவது அறிதற்குரியது.

உலகளாவிய வஞ்சி

ஆங்கில மொழிக் கலைக் களஞ்சியங்களில் நாடோடி இனத்தவர் பற்றிய உரைகள் உண்டு. பதினெட்டாம் நூற்றாண்டுவரை இவர் எந்நாட்டவர் என்பதில் குழப்பம் இருந்தது. முதலில் இவர்கள் எகிப்தியர் என்று எண்ணப்பட்டாலும், பின்னர் 'ஜிப்சிகள்' இந்தியாவிலிருந்து உலகின் பல பாகங்களுக்கும் சென்றனர் என்பது கண்டுணரப்பட்டது. இவ்வினத்தினர் கருநிறமேனியும் கருகருவென்ற முடியுமாய்க் காணப்படுகின்றனர் எனக் கலைக்களஞ்சியங்களில் சுட்டப்படுகின்றனர்.

உலகில் பல பாகங்களில் காணப்படும் இந்நாடோடி இனத்தவர் பேசும் மொழியில் இந்தோ-இரானியன் மொழிக்கலப்புக் காணப்படுகிறது என்றாலும், இந்தியாவிற்குள்-ஆரியர் வருகைக்கு முன்னர் இருந்த-பழங்குடியினர் வழிவந்தவராதல் வேண்டும் என்று கருதப்படுகின்றனர்.

உலகில் பல்வேறு பாகங்களில் இன்று காணப்படும் 'ஜிப்சி' இனத்தவருக்கும் தமிழ்க்குறவர் இனத்தவருக்கும், மானுடவியல் நோக்கில் ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

மேலை நாட்டில் காணப்படும் 'ஜிப்சி' இனத்தவருள் பெண்கள், நம்நாட்டுக் குறத்தியர் போலக் குறிசொல்பவராய் உள்ளனர். மேலும், நகைகள் அணிவதில் பேரார்வம் காட்டுகின்றனர். குறிப்பாகப் பொன்னகை அணிய விரும்புகின்றனர். இவ்வாறு நகை அணிவதன் மூலம் செல்வத்தைச் சேர்க்க முயலுகின்றனர். இத்தகையோர் நாட்டுப்புறப்பாடல்கள் பாடுவதிலும் பாடலுக்கு ஏற்ப ஆடுவதிலும் வல்லவர்களாய் உள்ளனர். கதை சொல்லும் சிறப்பு அவர் தமக்குக் கைவந்த கலை என்றும் கூடை சுமந்து வீடுதோறும் சென்று குறிசொல்லிப் பிழைக்கின்றனர் என்றும், ஆங்கிலக் கலைக்களஞ்சியம் கூறும்.

தென்னகத்தில் தமிழ், மலையாளம், கன்னடம், மகாராட்டிரம், தென் சமசுகிருதம் ஆகிய மொழிகளில் இடம்பெறும் குறத்தி, குறவன், சிங்கன், சிங்கி இந்தியா முழுவதும் பரவி வந்தனர் என்பதை இலக்கியங்கள் கூறுகின்றன. எடுத்துக்காட்டாக,

"குலமணிப் பாசியும் குன்றியும் புனைந்து
கலவைசேர் மருங்கிற் சாத்திய கூடையும்
வலதுகைப் பிடித்த மாத்திரைக் கோலும்"
"மொழிக்கொரு பசப்பும் முலைக்கொரு குலுக்கும்
... ... ...
கொட்டிய உடுக்கோ டாங்கிக் குறிமுதல்
மட்டிலாக் குறிகளும் கட்டினால் அடக்கிக்
கொங்கணம் ஆரியங் குச்சலர் தேசமும்
செங்கைமாத் திரைக்கோல் செங்கோல் நடாத்திக்
கன்னடம் தெலுங்கு கலிங்கராச் சியமும்
தென்னவர் தமிழாற் செயத்தம்பம் நாட்டி
... ...
காலமுன் போங்குறி கைப்பல னாங்குறி
மேல்இனி வருங்குறி வேண்டுவோர் மனக்குறி
மெய்க்குறி கைக்குறி விழிக்குறி முகக்குறி
எக்குறி யாயினும் இமைப்பினில் உரைக்கும்
மைக்குறி விழிக்குற வஞ்சிவந் தனளே''

என்று கொங்கணம் சென்றதும், ஆரியங் குச்சலர் தேசம் சென்றதும், கன்னடநாடு சென்றதும், கலிங்க நாடு சென்றதும், தெலுங்கு தேசம் சென்றதும், கலிங்கராச்சியம் போனதும் சொல்கிறாள்.

அதுமட்டுமா, "வடகன டில்லி வரை புகழ் புல்லி குறி சொல்லி" வந்தேன் என்று குற்றாலக் குறவஞ்சி கூறுவது மிகையில்லை. இந்தியாவில் பிற மொழிகளில், குறவஞ்சி இலக்கியத்தில் இடம் பெறும் அளவிற்குச் செல்வாக்கு பெற்றுள்ளது.

**'ஜிப்சி' — எந்த நாட்டினர்?**

'ஜிப்சி' என்னும் இனத்தினர் இன்று உலகம் முழுவதும் பரவியுள்ளனர் என்பது உண்மை. அவர் இந்தியாவிலிருந்து அயல்நாடுகளுக்குச் சென்றனர் என்பது முற்றிலும் உண்மை. அவ்வினத்தினர் இந்தியாவிற்கு ஆரியர் வருகை தருதற்கு முன்னரே சென்றிருக்க வேண்டுமெனில், அத்தகைய பழமை தமிழ்க்குன்றவர்க்கே உண்டு என்பதைச் சங்க இலக்கியம் மெய்ப் பிக்கின்றது.

தென்னகம் முழுவதும் குன்றக் குறவர் சுற்றி வந்து தம் பெயரையும் குறிசொல்லும் புகழையும் நாட்டினர் என்பதற்குக் 'குறவஞ்சி'' இலக்கிய வகை சான்றாகின்றது.



# தமிழில் புதுக்கவிதைகள் ஒருமதிப்பீடு

பேராசிரியர்
சு. குழந்தைநாதன்,

அறிவுத்திறத்தில் நாளும் மேம்பட்டு வரும் மனிதனால் இதுவரை முழுதுற வரையறைத்துச் சொல்லமுடியாத முக்கியமான இரண்டுகாலமும் தூரமும் என அறிவியலாளர் சொல்லுவர். ஒன்றுக்கு ஒன்று தொடர்புபடுத்தி (Relative) 'காலம் இது' தூரம் இது' எனச் சொல்லமுடியுமே தவிர, முழுமையான (Absolute) அளவை இதுதான் என ஒருபோதும் சொல்ல முடியாது. அதுபோல, பழமை எது? புதுமை எது? என்பதும் முழுதுற எல்லைக்கோடு கட்டி வரையறுக்க முடியாததொன்று.

புதியதோர் உலகு செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்

எனப்புரட்சிக் கவிஞர் பாடிய பழைய உலகமும் புதியஉலகமும் வரலாற்றுச் சகடச் சுழற்சியில் மாறி மாறி வருவனவாகவே உள்ளன; வரலாற்று நெடுஞ்சாலையில் ஆங்காங்கு நிறுத்தப் பெற்ற மைற் கற்களாக மட்டுமே தோன்றுகின்றன.

பெரிய பொருளாதார மாற்றங்களுக்கு ஆதார சுருதியாகக் கருதப்பட்ட பொதுவுடைமையும், அது எதிர்த்த முதலாளித்துவமும், செம்புலப்பெயல் நீர்போல காலத்துக்குக் காலம், நாட்டுக்கு நாடு மாறியிருப்பதோடு, சோவியத்து நாட்டிலேயே, புதுமறு மலர்ச்சி எனப் புதுக்கோலம் பூண்டு வருகின்றன.

நாடு சுதந்திரம் பெற்றபோது 'புதிய பாரத சமுதாயம் வாழ்க' எனத் தோள் கொட்டினோம். இன்று அதே பாரதத்தைச் சாடுகிறோம். 'இன்னுமொரு சுதந்திரம்' வரவேண்டும் என்றெல்லாம் வரிந்து கட்டி நிற்கிறோம். மீண்டும் மகாத்மாவின் பாதச் சுவடுகளைப் பற்றி நின்று, புதிய சமுதாயத்திற்கு ஒளியும் வழியும் தேடுகிறோம்.

இப்படிச் சமுதாயத்தில் காலந்தோறும் மாற்றங்களைப் பரிணமிக்க வைக்கும் திருப்பணியில், அவ்வச் சமயங்களில் உருவாகும் அமைப்புக்கள் முனைந்து நிற்கின்றன. குடும்பம், சமயம், ஆட்சி, கலை எனும் இவை சில உடன்பாடுகளையும் ஒப்பந்தங்களையும் பற்றுக்கோடாகக் கொண்டு, சமுதாய மாற்றங்களுக்கு வழிகோலித் தருகின்றன. இவற்றோடு வைத்தெண்ணத்தக்க, ஆற்றலுடைய பிறிதொரு கருவி - இலக்கியம்.

பணம் – பண்டம் – எனுமிரண்டும் பொருளாதார அளவைகள். பணம் பண்டத்தை வாங்கும் கருவியாகப் பயன்படுகிறது. இந்த ஏற்பாடு ஒருவகைச் சமுதாய ஒப்பந்தம் என்பார்கள். இப் பணத்தின் வடிவம் பலவகைப்படும். காசாக, காசோலையாக, கடன்முறிச் சீட்டாக (credit card) இந்தப் பணம் பல நிலைகளில் செலுத்து முறையாகிறது. அதுபோல, கலை, இலக்கிய வடிவங்களும் பல விதமாக உருமாற்றம் பெற்று, சமுதாயத்தில் செல்லுபடியாகின்றன. இவ்வாறு கலையும், இலக்கியமும் ஒரு சமுதாய ஒப்பந்தமாக முதன்மை பெறுகிறது.

கலைகளில் எல்லாம் விழுமிய கலை இலக்கியக்கலை. அந்த இலக்கியக்கலையில் மிகச் சிறந்த துறை கவிதை. உலகத்து மொழிகளில் எல்லாம் கவிதைகள் இயற்றப்பட்டு அனுபவிக்கப் படுகின்றன. கவிதைகள், மனித குலத்தின் சக்தி வெளியீடாக ஒவ்வொரு மொழியிலும் நாட்டிலும் வடிவெடுத்துள்ளன; வளர்ந்துள்ளன. கவிதைகளைப் படைக்கும் கவிஞன் தன் அனுபவத்தையே புலப்படுத்துகிறான்; அவனது இரசவாதத்திறனால் அதற்கு ஒரு சமூகப் பார்வை கிட்டி விடுகிறது.

பிறவற்றைப் போலவே கவிதைக் கலையிலும் தேய்மானம் ஏற்படத் தொடங்கியது. கவிதையை மூலக் கவியின் சொற்களில் நேருக்கு நேர் படித்து உணரும் கவிதை அனுபவம் காலாவதியாகி வந்தது. பழைய இலக்கியங்களுக்கு உரைதேடி அலையும் காலம் ஏற்பட்டது. இலக்கணவாதிகள் விதித்த நிபந்தனைகளில் திக்குமுக்காடிப் போன சிந்தனைகள் மூச்சுவிட முண்டியடித்துக் கொண்டிருந்தன. இலக்கிய மேடைகளின் இடத்தைப் பத்திரிகைகள் பற்றிக் காடாய் வளரத் தொடங்கின. அவற்றில் அடிக்கடி வந்த செய்திகளும் வார்த்தைப் பிரயோகங்களும் வளவளத்து, வனப்பிழந்து, சொழ சொழக்கத் தொடங்கின. பத்திரிகைகளின்

இடத்தை இப்போது தொலைக்காட்சி முதலிய கவர்ச்சியும் ஆற்றலும் கொண்ட தொடர்புச் சாதனங்கள் கைப்பற்றி வருகின்றன. தொழிற்புரட்சி தோன்றிய பின்னர், வீட்டிற்குள்ளே அடைந்து கிடந்தவர்களை அறிவியல் உலகம், வெளியே வெளிச்சத்திற்குக் கூட்டிச் சென்றது. இப்போது மின்னணுப் புரட்சி வந்ததன் பயனாக, வெளியில் சென்று சமூக உறவு கொள்ள விடாமல், நம்மை வீட்டுக்குள்ளே பூட்டிவைத்துக் கொள்ளும் விந்தை நிலை ஏற்பட்டு வருகிறது. இலக்கியம் தோன்றி இத்தனை ஆண்டுகளாகச் செய்யாத காரியத்தைத் தொலைக்காட்சி முதலியவை இப்போது மிக எளிதாகச் சாதித்து விடுகின்றன. அதாவது, சுலபமாக மனிதர்களை முழு முட்டாள்களாக்கி வருகின்றன!

மக்கள் பேச்சுவழக்கின் செம்மை உரைநடை; அவர்களது இசை வழக்கின் செம்மை கவிதை. இரண்டிற்கும் வேறுபாடு உண்டு; ஆனால் மாறுபாடு இல்லை கணக்கியலுக்கு எப்படி எண்கள் அடிப்படையோ, அப்படிக் கவிதைக்கு அசை, சீர்களின் யாப்பு அடிப்படை. இந்த அடிப்படையின் உயிர்நிலை-ஒலிநயம். ஒலிநயம் கெட்டால், கவிதை தன்னை முழுமையாகப் புலப்படுத்த முடிவதில்லை. இந்த ஒலி நயத்தின் பல்வேறு படிவங்கள் சொல்லின் வனப்பான பாவும் பாவினங்களும். இப்பாவகைகள் காலந்தோறும் மாறி வந்துள்ளன. இந்த மாற்றத்தைப் புலவனின் ஆற்றலே உண்டாக்கும். தொல்காப்பியர் காலத்துக்குப் பின் பாவும் பாவினமுமாக 650 வகைகள் உண்டாயின.

இப்படியெல்லாம் வனப்புற வளர்ந்த நம் கவிதைக்கலை வரலாற்றில் 'கம்பனொடு கவிபோயிற்று' எனும் துயர்நிலை ஏற்பட்டது. தமிழ்க்கவிதைச் சிற்றிலக்கிய ஆறுகள் 17, 18ஆம் நூற்றாண்டுகளில் தலபுராணத்துறைகளில்மேவி, வள்ளலாரின் அருட்பாக்களாலும் வேதநாயகரின் படைப்புகளாலும் சமுதாய வயல்களைச் சென்றடைந்தன. எனினும், தமிழுக்குத் தரும் உயர்வளிக்கும் தலைவனை எண்ணித் தவம் கிடக்கும் நிலையே நீடித்தது. பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதி மூட்டிய நாட்டன்பும், பாரதிதாசன் கூட்டிய தமிழியக்கமும் புதுப்பிரவாகங்களாயின. இப்புனலோட்டத்தில் தமிழ்க்கவிதையும் நீந்திக்களித்தது. குமரன், சக்தி, கலைமகள், கலைக்கதிர், பொன்னி, கண்ணதாசன் முதலிய இதழ்கள் ஈற்றடி தந்து வெண்பாப் போட்டிகள் நடத்தி, மரபுக் கவிதையுலகுக்கு உயிரூட்டி வந்தன; கல்லூரி மேடைகளும் கவி

யரங்குகளும் உரமூட்டி வந்தன; தமிழிதழ்கள் ஆண்டு மலர்களில் கவிதைகளை அழகுற வெளியிட்டு ஆக்கம் அளித்தன.

என்றாலும், மரபுதழுவிய பாவகைகளில், காலப்போக்கில் உயிரும் உணர்வு மற்ற சொல்லடுக்குகளும் செய்யுட்குப்பைகளும் வளர்ந்தன; கவியரங்குகள் கருத்துக்களைக் காயப்படுத்தும் சொற் சிலம்பங்களாடின. நமக்குச் செழுமையான பண்பாட்டுச் செல் வங்கள் இருந்தும் கூட, நிகழ்காலத்தில், உலகப் பண்பாட்டுச் சிந்தனை வளர்ச்சி வேகத்தோடு நாம் தொடரோட்டம் நடத்த முடியாத வண்ணம், ‘சொல்லும் திறமை தமிழ்மொழிக்கில்லை’ எனும் சோகச்சூழல் படர்ந்தது.

வாழ்வின் பல்வேறு நிலைகளில் ஏற்பட்டாக வேண்டிய மாற்றங்கள் கவிதையுலகிலும் பிரதிபலிக்கத் தொடங்கின. ‘புதுக் கவிதை’ பரிசோதனை முயற்சியாகப் பிறந்தது. அது நாளடைவில் ‘படைப்புக்கலையாகவே’ இடம் பிடிக்கத் துணிந்தது!

மேலைநாடுகளில் புதுக்கவிதை வரவு 19ஆம் நூற்றாண்டில் தொடங்கிற்று என்பார்கள். எட்கார் அலென் போவும், அமெரிக்க நாட்டு வால்ட் விட்மனும் ஆங்கிலத்தில் புலப்படுத்தினர். பிரெஞ்சு மொழியில் ‘கட்டில்லாக் கவிதை’ பிறந்தது. கலீல் கிப்ரான் போன் றோர் பிற மொழிகளில் அணிவகுத்தனர். வங்க மொழியில் தாகூர் எழுதிய ‘வளர்மதியும்’ தமிழில் பாரதி எழுதிய காற்று, காட்சி என்பனவும் இங்கே அந்த வகைக் கவிதையெழுச்சிக்குப் பூபாள மாயின.

மணிக்கொடி இலக்கிய காலகட்டத்தில் (1930-45) புதுக் கவிதை, ஆங்கிலத்தைப் பின்பற்றித் தமிழில் எழுதும் நகல் கலை யாக நின்றது. ந. பிச்சமூர்த்தி, கு.ப.ரா., வல்லிக்கண்ணன் எனும் முதல் அணியினர் தமது ஆங்கில மேதாவிலாசத்தைக் காட்டு தற்குப் புதுக்கவிதையைச் சிறிது காலம் கருவியாகக் கையாண்டு ஓய்ந்தனர்.

புதுக்கவிதை - 1957முதல் - ‘அதிகமாக வெளிச்சத்திற்கு வந்தது’. சரசுவதி, எழுத்து முதலிய இதழ்கள் பக்கம்தோறும் களம் அமைத்துத் தந்தன. சி.மணி, தருமு, சிவராம், வைத்தீசு வரன் முதலிய இரண்டாம் அணியினர், 1957-70 எனும் கால

கட்டத்தில் அறிமுகம் பெற்றனர். 'வார்த்தைகளை முறித்துப் போட்டு எழுதும் சுயதிருப்தி முயற்சியாகவே' புதுக்கவிதை வானம் இக்காலகட்டத்தில் தெரிந்தாலும், ஆங்காங்குப் பலசித்திர மின்னல் களும் கார்த்திகைப் பறைகளும் பளிச்சிட்டன. சி.சு. செல்லப்பா எழுதிய, "நீ இன்று இருந்தால்..." எனும் குறுங்காவியத்தில், காந்தியடிகளைப் பற்றிய வரிகள் உண்மையான உணர்வுப் பிரதிபலிப்புக்களாக நிற்பவை:

"பெற்ற சுதந்திரத்தில் உனக்குத் திருப்தி இல்லை
கொண்டாட்டத்தில் கலக்க உனக்கு மனம் இல்லை
கோலாகலத் தலைநகருக்கு வரவே இல்லை
உன்னவர்கள் அழைத்தும் மறுத்துவிட்டாய்
.... ... ....
சுதந்திர தின்த்தன்று
பாயசம் வைத்து
நாடே மகிழ்ச்சியில் மூழ்கி இருக்கையில்
அன்றைக்கு உபவாசம் இருந்தாய் ...."

கணையாழி, கசடதபற, தீபம், ஞானரதம், தாமரை, கவிதை, வானம்பாடி, அன்னம் முதலிய இதழ்கள் 1970 முதல் புதுக்கவிதைக்குப் பாத்தி கட்டித் தந்தன.

''மானுடம் பாடும் வானம்பாடி இயக்கம்'' எனும் 3-ஆம் அணி புறப்பட்டது. ''சொற்களில் புதிய வண்ணச்சேர்க்கை, உருவக நிறைவு, படிம அமைப்பியல், நவ நவமான உத்திகள், மரபில் காலூன்றிப் புதுமை வானில் கிளை பரப்பும் கவிதைப் போக்கு, மனிதப் பண்பின் வளர்ச்சி எனுமிவற்றில் நம்பிக்கை கொண்ட கூட்டம்'' எனச் 'சிற்பி' இந்த அணிக்குக் கட்டியம் கூறி னார்.

"எதிர்கால நம்பிக்கை, கொள்கைத் தெளிவு, தேசப்பற்று, நேர்மை, தமிழ் மரபு, உணர்ச்சி, எளிமை, பொறுப்புணர்ச்சி, சமுதாய நேயம், கூட்டுறவு மனோபாவம் முதலியன மூன்றாவது கட்டக் கவிஞர்களிடம் பரவலாகக் காணப்பட்டது" என ஒப்பியல் பேரறிஞர் டாக்டர் கைலாசபதி கண்டுரைத்தார். கலாப்பிரியா, ஞானக்கூத்தன், காமராசன், மீரா, மேத்தா, அப்துல் ரகுமான், சிற்பி, அபி, தமிழ்நாடன், இன்குலாப் எனும் தளபதிகள் போர் வாள் ஏந்தினர்.

"இலக்கண வேலியைத் தாண்டிய இலட்சிய வேலிகளை (வேள்விகளை) புனையப் போவதாக முரசறைந்தனர். பொதுவுடைமை மணம் பரப்பும் 'சினேகப் புஷ்பங்களை' அடையாளப் பூக்களாகப் பலர் சூடிக் கொண்டனர்.

"சொற்களை ஆயுதங்களாகக் கையாளும் பக்குவம், பழைய யாப்பில் உள்ளதை விட, அர்த்த, ஆழமுள்ள சந்த நுட்பம், வடிவ அமைப்பு, உள்ளடக்கமே வளர்ந்து அமையும் உத்திப் புதுமை - புதிய பார்வை ... "என்பன இந்தப் புதுக்கவிதை அணிவகுப்பின் வழிநடைச் சிந்துகளாயின. தமிழ்நாட்டின் அனைத்துப் பதிப்பாளர்களும் புதுக்கவிதைப் படைகளுக்குத் தண்ணீர்ப் பந்தல் நடத்தத் தயாராகி வந்தனர்! புதுப் போக்கினைப் புரிந்து கொண்டு புதுப் பாணிகளைத் தொங்கவிடத் துணிந்தன!

எங்கும் நீக்கமற இடம் தேடிக் கொண்டிருந்த புதுக்கவிதைகள், 1985க்குப் பின்னர்,சப்பென ஆக முற்பட்டன. துணுக்குகளைப் படித்து விட்டு, அடுத்த வினாடியே மறந்து போவது போல, இந்தக் கவிதை வரிகளும், கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாயின. வாழ்வின் பலநிலைகளிலும் ஊடுருவிய தேக்கமும் தயக்கமும், சிதைந்து மசிந்து போகும் மனோபாவமும் - புதுக் கவிதைப் போக்குகளைப் பாதிக்கத் தொடங்கின; அவை புதிய குறிக்கோள்களையும் கோரிக்கைகளையும் தேடி, எங்கோ தவம் இருக்கப் போய்விட்ட வெறுமை உணர்வுகளே - அவர்கள் போட்டு வைத்த இலட்சிய வேலிக்குள் முளைக்க முற்பட்டன.

'யதார்த்தம்' என்றதொரு சொல், புதுக்கவிதைத் திறனிகள் இடையே அடிக்கடி பரிமாறப் பெறும் சங்கேதமாக உள்ளது. யதார்த்தம் என்றால் நடப்பியல். அது இல்லாமல் கலையே கிடையாது. ஏதோ ஒரு இடத்தில், ஒரு நிலையில், ஒரு முறையில் உண்மையை, யதார்த்தத்தைத் தொட்டே தீர வேண்டும் என்பார்கள். ஆனால் ஒன்று, உலகின் நடைமுறை மட்டுமே யதார்த்தம் ஆகிவிடாது. அவற்றினூடே படைப்பாளி இனம் கண்டு கொள்ளுகிற, கண்டு சொல்லுகிற உண்மையே யதாத்தர்ம். 'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்' எனப் பாரதி இதையே அன்று சொன்னான். படைப்பாளியொருவன் உலக யதார்த்தங்களை வாங்கித். தனது அனுபவக் கண்ணாடிமூலம் பிரதிபலிக்கிறான். வியாபார நோக்கமோ, விளம்பரப் பிரியமோ

இருந்தால், அவனது யதார்த்தம் அவற்றிற்குள்ளே புதையுண்டு போகும்; சமூகப் புற்றுநோய்க்கிருமியாகவே, உள்ளிருந்து அழிக்கும் பொல்லாத போலி வடிவில் அந்த யதார்த்தம் புல்லிளித்து நிற்கும்.

புதுக்கவிதைக்கு நல்லதொரு பக்கமும் பரிணாமமும் உண்டு; இருண்டமூலையும் ஆபாசமும் இன்னொரு புறம் உண்டு. புதுக்கவிதையின் சிறப்பியல்பு - அதன் சொற்செட்டு. படைப்பாளி மனத்தில் அவ்வப்போது தோன்றும் மின்னல் கீற்றுக்களும் இடி முழக்கங்களும் வாழ்க்கை வானத்தை அவனுக்கு எட்டிய வட்டத்தில் தொடுகின்றன. புதுக்கவிதை - சொற்கள் கொண்டாடும் சுதந்திர தினவிழா. கருத்துக்கள் தம்மைத் தாமே ஆளக்கற்றுக் கொண்ட புதிய மக்களாட்சி முறை.

"வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக? எனக் கேட்கும் கவிஞர் அப்துல் ரகுமானின் சொற்கள் சாதாரண வடிவில், நின்று சக்தி வாய்ந்த அம்புகளாக நெஞ்சை, நினைப்பை ஊடுருவிச் செல்கின்றன.

"இன்றைய வாழ்க்கைச் சிக்கலை உள்ளபடி எடுத்துக் காட்டுவது, வாழ்வில் உள்ள சிடுக்கை, சிக்கலை அப்படியே காட்டுவது, சொற்களை சிந்தனைகளை உடைத்துப் புதுவளத்துடன் கையாளுவது எனப் புதுக்கவிதையின் அடிப்படைக் கூறுகளை, இருமொழி இலக்கியத் திறனாய்வாளர் க. நா. சு. சுட்டிக் காட்டுகிறார். சமூகத்தின் ஆத்மார்த்தமான துயரங்களைக் கண்டு வெகுண்டெழுந்து உயிர்ப்புள்ள பாடல்களைப் பழகியுள்ளார் எனப் பாராட்டுகிறார்.

புதுக்கவிதையில் என்ன இருக்கிறது? அரசியல் சாயல் (சாயம்) இருக்கிறது. சிருங்கார(வி)ரசம் இருக்கிறது. அது கவிதைதானா? என்ற எதிரொலியும் கேட்கிறது. 'வெறும் வார்த்தைத்தோரணங்கள், கருத்துக்கள் பரிணாமம் பெறாத பழகிப் போன பொருள்கள், முழுவாக்கியமாக அமையாத குறைப்பிரசவப் பிண்டங்கள்', வெறும் நிழற்கோலங்கள், நினைவில் நிற்காத மேக ஓட்டங்கள், அளவுக்கு மீறிய பிற சொற் கலவைகள், தேசத்தையே இடதுசாரியாக்கி விடவேண்டுமெனும் ஏக்கத்துடிப்புக்கள், வர்க்க நீக்கத்திற்காகப்பாடுபடப் பறைசாற்றும் புதுவர்க்கங்கள்.

புதுக்கவிஞர்களிடம் முயற்சியின்மையால் இலக்கணம் இல்லை; திறமையின்மையால் வடிவம் இல்லை; கற்பனை இன் மையால் நயம் இல்லை; அருவருப்போடு எழுதுவதால் பண்பாடு இல்லை. இவர்கள் கனவுகளைமட்டும் வளர்க்கிறார்கள்; கனல் வளர்ப்பதில்லை; கயமையைக் கழுவேற்றக்களம் அமைப்பதில்லை தம் கவிதைச்சிமிழுக்கு எத்தனை எத்தனை "இசங்களையோ'' அடைக்கப்பார்க்கிறார்கள்! "Romanticism Realism, Naturalism, Impressionalism, Surrealism, Existentialism," இவை என்ன வென்றே நமக்குப் புரியாத புதிர்நடையில், விடுகதை போடுகி றார்கள்.

புதுக்கவிதைக்காரர்கள் சிறிதுகூட உலக அறிவும் சமூகச் சிந்தனையும் இல்லாது அரசியலையும் அரசியல் வாதிகளையும் தாக்கும் கலையில் கைதேர்ந்துள்ளார்கள். முற்போக்கு ஆடையை யும் பிற்போக்குச் சுயதிருப்தியையும் மென்று மென்று துப்புகி றார்கள். சிலர் எதை எதையோ எழுதிவிட்டுக் கவிதையை மட்டும் எழுதாமல் விட்டு விடுகிறார்கள்.

இவ்வாறல்லாம் புதுக்கவிதைக்காரர்களைக் கடுமையாகச் சாடும் விமரிசனங்களும் நம் பார்வையில் பட்டுக்கொண்டேயிருக் கின்றன.

புதுக்கவிதையில், ஒரு கவிஞன் எழுதிய தத்துவப் பாடல் இது ...

இது என்ன?
  இது என்னவோ!
அது என்ன?
  அது என்னவோ?
எது என்ன?
  எது என்னவோ?

இந்தத்தத்துவம் நமக்குப்புரிவது ஒருபுறம் இருக்கட்டும். இதை எழுதியவருக்காவது புரிந்திருக்குமோ எனக் கேட்கிறார்கள்!

என்றாலும், இன்று புதுக்கவிதைகள், புதிய சமுதாய இலக் கியமாக ஏற்பட்டு வருகின்றன. இக்காலத்தில் கருத்தரங்கில் மரபுக் கவிதைக்கு இடம் தராது, புதுக்கவிதைக்கு மட்டும் வாய்ப் பளித்திருப்பது - புதுக்கவிதை பெற்று வரும் முக்கியத்துவத் தையே உணர்த்துகிறது.

_ சமுதாய நடப்பியல் படப்பிடிப்போடு, புதிய இலட்சிய சமுதாயக் கணிப்பும் பல புதுக்கவிதைகளில் உள்ளன என்பதையோ, பிற மொழிகளில் மொழி பெயர்த்துப் போற்றும் அளவுக்குச் சில படைப்புக்கள் சிறப்புப் பெற்றுள்ளன என்பதையோ மறுக்க முடியாது.

கடல் அலைகளைப் போல அடுத்தடுத்துப் புறப்பட்டு வரும் புதுக்கவிதைச் சாகரத்திலிருந்து எனக்குப் பிடித்த, என் நெஞ்சத்தைத் தொட்ட சில வார்புக்கள் இவை. பலவற்றை நீங்களும் படித்திருப்பீர்கள்.

புதுக்கவிதைகளில் மறக்கமுடியாத அமரவாசகக் கவிதைகள் இவை :

'வானம்பாடி' 1973 இதழில் வெளிவந்த 'சுதந்திரம்' எனும் தலைப்பில் திரு. அரங்கநாதன் பாடிய,

“இரவிலே வாங்கினோம்
இன்னும் விடியவே இல்லை'' எனும் வரிகள்

மேடையெல்லாம் எதிரொலிக்கின்றன. “பொதுநலம்'' எனும் தலைப்பில் 1947 இல் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடிய,

“இரவில் வாங்கும்
இந்திய விடுதலை
என்று விடியுமோ
யார் அறிகுவரே?'' எனும் வரிகளின்

சாயல், அரங்கநாதன் பாட்டில் அப்படியே படிந்திருந்தாலும் பாரதிதாசன் வரிகளை விட, அரங்கநாதனின் இரண்டு வரிகளே அரங்கங்களில் கேட்கின்றன.

கவிஞர் 'சோதி' பாடிய

“நாங்கள் சேற்றில்
கால் வைக்காவிட்டால்
நீங்கள் சோற்றிலே
கை வைக்க முடியாது'' எனும் பாடலும்

அமரத்துவம் பெற்று வருகிறது.

கவிஞர். நா. காமராசன், 'கறுப்பு மலர்களில்' விலை மகளிரைப் பற்றி எழுதிய,

"நாங்கள் நிர்வாணத்தை
விற்பனை செய்கிறோம்
ஆடைகளை வாங்குவதற்காக" எனும் பாடலும் இந்த வகைதான்!

"உறக்கம் என் ஒத்திகை
மயக்கம் என் முற்றுகை
ஜன்ம விழாவின்
'ஜனகணமன' நான்"

என 'மரணம்' பற்றிப்பாடிய அப்துல் ரகுமானின் இக் கவிதை, சிந்தனை, கற்பனை, வாக்கு வன்மை எனுமிவற்றால் மரணத்தை வென்று வாழ்கிறது.

அரசியல் நாட்டமும் அதிகார ஆதிக்கமும் வாழ்க்கை முழுவதும் வியாபித்திருப்பதால், அரசியல், சமுதாய ஊழல்கள், குறைகள் பற்றிய சனநாயகக் கவிதைகள் படைக்கலங்களாகக் புறப்பட்டன. அவற்றுள் சில வருமாறு;

பொதுவுடைமைக் கவிஞர் சிலரைத் தவிர, பிறர் எல்லாம், காந்தியண்ணலின் பாதையில் நாடு நடக்காத ஆத்திரத்தையும் ஆதங்கத்தையும் பலவகையில் புனைந்துள்ளனர்.

புதுமைப் பித்தன் அன்றே பாடினார் -

"வேதம் படித்திடுவோம்.
வெறும் கை முழம் போட்டிடுவோம்
சாதத்திற்காகச் சங்கரனை விற்றிடுவோம்
அத்தனைக்கும் மேலல்லோ
அகிம்சைக் கதைபேசி
வித்தகனாம் காந்தியினை
விற்றுப் பிழைக்கின்றோம் ... ..."

அப்துல் ரகுமான் – இந்திய சுதந்திரப் போராட்டத்தைப் பாரத குருச்சேத்திரப் போராக உருவகித்துப் பாடினார்.

"அது ஒரு முரண்பட்ட
குருச்சேத்திரம்
அங்கே

அர்ச்சுனர்கள்
ஆயுதம் ஏந்தத் துடித்தார்கள்
ஆனால் கண்ணனோ
ஆயுதங்களை நிராகரித்தான்
அவன் புல்லாங்குழலே
எதிரிகளைப் பணிய வைத்து விட்டது"

தீவிரவாதிகளை, அர்ச்சுனர்களாகவும். காந்தியடிகளைக் கண்ணனாகவும், அகிம்சையைப் புல்லாங்குழலாகவும் உருவகித்துப் புது ராகம் பாடுகிறார்.

மு. மேத்தாவைச் சிறந்த புதுக்கவிஞராக அறிமுகப்படுத்திய அற்புதப் படைப்பான, ''தேசபிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி'' வரிகள் இவை:

"அமுத சுரபியைத்தான்
நீ தந்து சென்றாய்
இப்போது
எங்கள் கைகளில் இருப்பதோ
பிச்சைப் பாத்திரம் !
எங்கள் வாழ்க்கை
இருட்டோடு இல்லறம் நடத்துகிறது!
எங்களுக்கோ
வெள்ளியும் தங்கமும்
விழாக்களின் பெயரில்தான்
வருகின்றன ...''

''கண்ணீர்ப்பூக்கள்'' எனும் தொகுப்பில் வெளிவந்த இக்கவிதையைப் படிக்கும் போதெல்லாம் கண்ணீர் சுரக்கவே செய்யும்.

நாம் சுதந்திரம் பெற்றதும், பெற்ற சுதந்திரத்தால் நாட்டில் மண்டிய அவலங்களும் பல கவிஞர்களுக்குப் பாடு பொருளாகியுள்ளன :

''அவன்
ஒரு
பட்டு வேட்டி பற்றிய
கனவில் இருந்த போது
கட்டியிருந்த கோவணம்
களவாடப் பட்டது"

'1947 ஆகஸ்ட் 15' எனும் கவிதையில், நாம் பெற்றிருப்பது ஆகஸ்ட் சுதந்திரம் தானே தவிர, அது ஆனந்த சுதந்திரமில்லை" என்பதை கவிஞர் வைரமுத்து வயிற்றெரிச்சலோடு கூறுகிறார்.

''வளமை எல்லாம்
தன்னுடம்பில்
வைத்திருக்குது இந்தியா
அதை
வழி நடத்த
ஆளில்லாமல்
படுத்திருக்குது நந்தியாய்"

எனச் சோதிவளவன் பாடினார்.

வாக்காளப் பசுமாடுகளின் வயிற்றைப் புறக்கணித்துவிட்டு வாக்கெனும் காம்புகளை மட்டும் நேசிக்கும் இன்றைய அரசியல் வாதிகளை, 'வாக்குப்பொறுக்கிகள், ஓட்டுத் திருடிகள் ''எனப் புதுக்கவிதை சாடுகிறது.

''நாற்காலிகள்
காலியாக இருக்கின்றன
யார் வரப் போகிறீர்கள்?
பரவாயில்லை வாருங்கள்
காலி செய்யத்தானே
வருகிறீர்கள்?

எனத் ''தேர்தல்'' எனும் கவிதையில், கவிஞர் மு. மேத்தா குத்திக் காட்டுகிறார்.

கவிஞர் வாலி, ''பொய்க்கால் குதிரைகள்'' எனும் கவிதையில் அரசியல் பொய்க்குதிரைகளைப் புலப்படுத்தும் வரிகள் இவை:

''வாக்காளப் பெருமக்களே
நான் உங்கள் வேட்பாளன்
நீங்கள் என்னைத் தேர்ந்தெடுத்தால்
ஜாதிகளை ஒழிப்பேன்
வீதிகளில் உள்ள ஜாதிகளின்
பெயர்களை அழிப்பேன்
நீ அந்த ஜாதி நான் இந்த ஜாதி

என்று பேசுவோரால் தான்
தேசம் கெட்டு விட்டது
எனவே
சாதியில்லாத சமுதாயத்தை
அமைக்க
எனக்கே
வோட்டுப்போடுங்கள்
நினைவில் இருக்கட்டும்
நான் உங்கள் ஜாதிக்காரன் ....!

இந்தக்கடைசி வரி, அரசியல் வேடதாரிகளின் முகத்திரையைக் கிழித்துக் காட்டுகிறது.

அடுத்தடுத்துத் தேர்தலை நடத்தினால் போதும், இந்த நாட்டில் 'சோசலிசம்' தானாக வந்து படும் எனக் கவிஞர் மீரா "ஊசிகளில்" புதுப்பாதை காட்டும் கவிதை இது:

"ஐந்து வருடம்
முடிந்தால் தேர்தல்
என்பதை மாற்றி
இங்கே
வருடா வருடம்
வைத்தால் போதும்
பெரும் பெரும்
புள்ளிகள் எல்லாம்
வெள்ளிப் பணத்தை
சுலபமாகச்
சோசலிசத்தை
அடையும் வழியிது
அற்புத வழியிது ... "

சுதந்திர நாட்டுப் பொருளாதார, சமூக நலத்திட்டங்களின் வக்கிரங்களை நையாண்டி செய்யும் 'துறையரசன்' கவிதை இது.

"அடுத்த குழந்தை
இப்போது வேண்டாம்
இரண்டிற்குப்பிறகு
எப்போதும் வேண்டாம்

அரசு விளம்பரங்கள்
கண்ணைப்பறித்தன.
ஆமாம்?
இரண்டுக்கு மட்டும்
என்ன திட்டம்
போட்டுள்ளார்களாம்?

"உப்பிய வயிற்றுக்கும்
உட்குழிந்த வயிற்றுக்கும்
உள்ள மேடுபள்ளங்கள்
சமமாக்கப்பட வேண்டும்

என வேடந்தாங்கல் கவிஞர் ஒருவர்" சிறகுகளே போதும்" எனும் தலைப்பில் (வேடந்தாங்கல் சரணாலயத்திலிருந்து) சிறகு விரிக்கிறார்.

'நீலம் என்பது நிறம் அல்ல'' எனும் தொகுப்பில் வலம்புரி ஜான், பட்டாங்கிலுள்ளபடி இன்றைய இரு வகுப்புக்களை இனம் பிரித்துக்காட்டுகிறார்.

''எங்கள் நாட்டில்
தவறு செய்கிறவர்கள்
செய்யாதவர்கள்
என்று
இரண்டு வகுப்பார்
இல்லவே இல்லை
பிடிபட்டோர் ஒருவகை
பிடிபடாதோர் மறுவகை

சட்டங்களை உருவாக்கவும் நிறைவேற்றவும் அமைந்த சட்டமன்றங்கள் சண்ட மாருதப் புயல் வீசும் அமர்க்களங்களாகித் தலை குனியவைக்கும் பரிதாபத்தைப் பாடும் கவிதை இது ...

"அன்று
அயோத்தி ராமன்
காட்டில் அலைய
பதினாறு வருஷம்
இந்த நாட்டை
ஒரு ஜோடி செருப்பு
சிறப்பாய் ஆண்டதாம்.

இன்று
கூச்சல் குழப்பம்
போர் முழக்கம்
யுத்தம் எல்லாம்
மக்கள் மன்றத்தில்
உள்ளேயே
நடந்து முடிந்திட ...
செருப்படி பட்டு
ஜனநாயகத்தோடு
தேசிய ஒருமைப்பாடும்
படாத பாடு
படுகிறது!
பாதரட்சைகள்
புலம்புகின்றன ...
"அன்று
மன்னர் ஆட்சியில் கூட
சிம்மாசனம் தந்து
மதிக்கப்பட்டோம்
இந்த பாழாய்ப்போன
மக்கள் ஆட்சியிலோ,"
உதைத்துக் கொள்வது
நீங்கள் ...
காயம் பட்டுக் கொள்ள
நாங்களா?

அரசியல் மட்டுமின்றி இன்றைய வாழ்க்கைச் சிக்கலையும் உள்ளபடி புதுக்கவிதை எடுத்துக்காட்டுவதோடு, அதன் பார்வை, ஆழமாக, ஆணித்தரமாகப் பதிந்துள்ளது என்றே கருதலாம்.

செல்வபாரதியின் 'அஸ்தமனம் மரணமில்லை'' யில் வெளி வந்த ''ஒரு திருமண அழைப்பிதழ்'' குடும்பங்களில், சமூகத்தில் நாம் சாதாரணமாகச் சந்தித்து வரும் அவலத்தைச் சற்று வித்தி யாசமாகக் காட்டுகிறது.

"அட்சய வருடம்
ஆவணி மாதம்
பதினைந்தாம் நாள்
சிம்ம நட்சத்திரம்

கன்னிகா லக்கனத்தில்
செல்வன் சேகர் (எட்டாம் வகுப்பு)
செல்வி கௌசல்யா பிஎஸ்ஸி
இருவருக்கும்
பத்தாயிரம் ரூபாயும்
பத்துப்பவுனும்
மணவறைக்கு
மாப்பிள்ளை வருமுன்
தரவேண்டுமென்று
பெற்றோர்களால்
நிச்சயிக்கப்பட்டு
மேற்படி திருமணம்
தாங்கள்
தங்கள் குடும்பத்துடன்
வருகை தந்து
என் மகள்
பிரிந்தும்
எரிந்தும் வராமலிருக்கப்
பிரார்த்திக்க வேண்டுகிறேன்
இப்படிக்கு
சோகத்தை மட்டுமல்ல
கோபத்தையும்
கண்ணீராக
வெளிப்படுத்தக்
கற்றுக் கொண்ட
கண்ணுச்சாமி ... ..."

"யாண்டு பல ஆகியும் நரையில ஆகுதல் யாங்காகியர் என வினவுதிராயின் ... ... எனக் கேட்ட பிசிராந்தையாரின் புறப் பாட்டு, கவிஞர் சிவசக்தியால் காலத்திற்கேற்ப மாற்றிப்புனை யப்பட்ட வகை இது ... ...

"யாண்டு சிலவே ஆகியும்
நரை பல ஆகுதல்
யாங்கு ஆகியர் என
வினவுதிர் ஆயின் ... ....

மாண்பிலா மனைவி
தறுதலைத் தனையர்
சுரண்டிடும் சுற்றம்
கடுஞ் சொல் மேலாளர்
நன்றியிலா நண்பர்
அரசியல் பேய்கள்
ஆகியோர் உறைகாடு
யான்வாழும் நாடே !"

பட்டி மன்றங்களை அறிவாலயங்களாக்காமல், பிழைப்புக் கருவியாக்கிக் கொண்ட சில பேச்சாள வர்க்கத்தினரை 'விதி' எனும் கவிதையில் 'அக்கினி புத்திரன்' சுட்டெரிக்கப் பார்க்கிறார்.

"இவர்கள்
கற்றுச் சொல்லிகள்
கட்சி மாறிகள்
காலம் தின்னிகள்
சமூக உண்ணிகள்
இலக்கிய அலிகள் ..."

"மிஸ் தமிழ்த்தாயே!

நமஸ்காரம்" என "அக்டோபசும் நீர்ப்பூவும்" தொகுப்பில் வந்த கவிதை வரிகள் - தாய்மொழியினை நாம் போற்றி வளர்க்கும் நடைமுறை அருமைப் பாட்டை நையாண்டி செய்கின்றன.

மானுடம் பாடும் புதுக்கவிதைகளில் சில, உலகளாவிய மனித நேயத்தையும் சமாதான சகவாழ்வில் ஆர்வத்தையும் புலப்படுத்தியுள்ளன.

நீலமணி எழுதிய "ஒரு பிடி சூரியன்" —

"உலகமே ஆயுதக்
கிடங்கானதால்
அடுத்த சூரியோதயம்
நமக்கு நிச்சயமில்லை" என்று வருந்தி நின்று,

"அரசுகள்
மக்களால் மக்களுக்காகவாம்
போர்கள்
யாரால் யாருக்காக?" எனக் கேட்கிறது.

அப்துல் ரகுமானின் ''சித்திர மின்னல்களில்'' உள்ள ''சமாதான தேவதை'' ஓர் அரிய படைப்பாக எக்காலமும் பேசப்படும் தர முடையது :

''சமாதான தேவதை
ஊர்வலம் வருகிறாள் ...
காகித வீதியில்
கருட வாகனத்தில்
சமாதான தேவதை
ஊர்வலம் வருகிறாள் ...
உலோகப் பறவைகள்
ஒலிமலர்தூவ
கர்ப்பப் பூக்களின்
பன்னீர் மணக்க
நகரும் சக்கர
நாதசுரங்கள்
மேளம் கொட்ட
வெண்புறாச் சிறகுத்
தோரணம் ஆட
சமாதான தேவதை
ஊர்வலம் வருகிறாள் ... ...

கவிதைமுழுவதும் ஒரு குறியீட்டில் ஊடுசரமாகக் கற்பனைப் படிமம் துலங்கப் புனையப்பட்ட படைப்பு இது. இப்படித் தரமான கவிதைகளாகப் பலவற்றைக் காட்டலாம்.

கவியரசு கண்ணதாசன் - தம் காலத்திலேயே, இருநூற்றுக்கும் மேற்பட்ட புதுக்கவிஞர்கள் இருப்பதாகக் கணக்கிட்டுச் சொன்னார். இன்று அது இன்னும் பல மடங்கு உயர்ந்திருக்கக் காணலாம்.

வெள்ளத்தின் பெருக்கைப்போல மேவிவரும் புதுக் கவிதை களில், கருத்துக்கே, அதைச் சொல்லும் புதிய சமூக அமைப்பின் ''நெம்புகோலாக'' கருதப்படும் புதுக்கவிதைகளில் ஆற்றலுக்கே முதலிடம் தரப்படுகிறது. யாப்பு வடிவச் சிறப்பெல்லாம் இரண் டாம் நிலைதான் என்றாலும், மரபுக் கவிதை இயற்றும் ஆற்றலும் கொண்டவர்களின் புதுக்கவிதைகளில் புலமையும் இலக்கிய நுட்ப மும் செறிந்துள்ளன. கண்ணதாசனின், போய் வருகிறேன், ஞான மலர்கள், புஷ்பமாலிகா, கலைஞர் கருணாநிதியின் கவியரங்கில்

கலைஞர், சங்கத்தமிழ் .... இன்னும் பல கவிவாணர்களின் படைப் புக்கள் முதலியவற்றைப் புதுக்கவிதைகள் என்பதைவிட, ஒரு வகைக் 'கட்டற்ற கவிதை' வடிவங்கள் எனக் கூறலாம். மரபுக் கவிதையிலே காணும் எதுகையும் மோனையும் இவற்றில் இருந் தாலும் ஒலிநயமும் உணர்ச்சிப் பாங்கும் கூடியிருந்தாலும், யாப் பமைதி பெரும்பாலும் பின்பற்றப்படுவதில்லை. வசனத்தின் உரு வத்தையும் கவிதையின் உள்ளடக்கத்தையும் கொண்ட இவ்வகை களும் இன்று புதுப்பாதை அமைக்கின்றன. என்றாலும் இம்முயற்சி யில், மொழிப் புலமையோ கற்பனை வன்மையோ இல்லாதவர் களும் ஈடுபட்டு, கானமயிலாடக் கண்ட வான்கோழிகளாயிருக் கிறார்கள். ஆசையிருக்கும் அளவிற்கு இவர்களிடம் ஆக்கத்திறம் இல்லை.

காலந்தோறும் வடிவத்திலும் வார்ப்பிலும் புதுப் புது வண்ணங்களை உருவாக்கிக் கொள்ளுவதே வாழும் கவிதை. இதுவரை கிட்டியுள்ள நமது மூவாயிரமாண்டுத் தமிழ்க் கவிதை வாலாற்றில் இந்த வளர்சியும் மாற்றமும் ஏற்பட்டே வந்துள்ளது. அகவலில் இருந்து வெண்பா பிறந்தது; வெண்பா விலிருந்து விருத்தம் பிறந்தது; விருத்தத்திலிருந்து சிந்துப்பாடல் பிறந்தது; சிற்றிலக்கியக்கிளை விரிந்தது. இந்த அரை நூற் றாண்டில், தமிழிக்கியத்தருவின் பக்கவேரிலிந்து முளை கிளம்பிப் புறப்பட புதுக்கவிதை, படர்வேலிக்கருவை மரங்களைப்போல எங்கும் வியாபித்துத் தலைவிரித்தாடுகிறது. மரபுவழிக்கவிதைக ளுக்குகெல்லாம் ஏற்பட்ட விதிமுறைகள்போல, பிறந்தமேனியாகப் பொத்தென்று விழுந்துவிட்ட புதுக்கவிதைக்கும் சில நெறிமுறை களை ஏற்படுத்தித் தரவேண்டும். படிமம், உள்ளடக்கம், உத்தி எனப் புதுப்புதுச்சொக்காய்களைத் தைத்துப்போட்டு அழகு பார்க் கும் புதுக்கவிதைத்திறனிகள் கூட்டம் பெருக வேண்டும். இதனால் புதுக்கவிதையின் வகையும் வனப்பும் வலுப் பெறும்.

''புதுக்கவிதை, மரபுக்கவிதை எனும் சமாதியில் முளைத்த தில்லை. அது ஒருவகை; இது ஒருவகை. தமிழ்க்கவிதையின் வளர்ச்சிப்போக்கில் ஒரு திருப்பம்'' என வரையறுக்கும் அறிவியல் பேரறிஞர் டாக்டர் வா. செ. குழந்தைசாமியின் கருத்து சிந்திப் பதற்கு உரியது.

''புதுக்கவிதை வரவு, வாண வேடிக்கை போல் இருக்கக் கூடாது. வானமெனும் வீதியில் வாரியிறைக்கப்பட்ட நட்சத்தி ரங்களைப் போல, ஓரிரவாவது கண் கொள்ளாக் காட்சி தர வேண்டும்.

''கற்பனையின் திறம்; நாளை இயலும் வாழ்வைக்
காணுவது! செயல் உலகக் கண்கள் இன்றிச்
சொற்சிலம்பம் ஆடுவதும் சூனியத்தில்
சொர்க்கத்தைக் காணுவதும் புரட்சி அன்று!

எனும் குலோத்துங்கன் மதிப்பீட்டுத்தீர்ப்பு என்றும் மதிக்கத் தக்கது.

குறைகளை மட்டுமே குத்திக்காட்டாமல், கொள்ள வேண் டிய குணநலன்களையும் எடுத்துச் சொல்வதும் புதுக்கவிதையின் நோக்காக அமைதல் வேண்டும். நல்ல இலக்கியம் நமது நினை வுகள், கற்பனைகள், அறிவுப்போக்குகள், அவற்றிற்கான கார ணங்கள், இவற்றை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, எட்டாததை யும் நம் கைக்கு எட்டுவதாக ஆக்கித்தரவேண்டும்.

''மாறிவரும் சமூகத்தின் மாற்றங்களுக்கு ஏற்பக் கவிதை தன்னைக் காலத்திற்குக் காலம் தோலுரித்துக் காட்டுகிறது'' என ஆங்கில இலக்கியப் பேராசான் டி.எஸ். எலியட் கூறினான். நம் தமிழ்க் கவிதைக்கும் இது பொருந்தும். புதுக்கவிதை அத்தகைய தொரு பரிணாம வளர்ச்சி நிலைக்கு வருவதற்குள், தன்னுடைய சுடரொளிக் கதிர்களை விதிப்பதற்குள் கண்டனப் புயற்காற்றால் அதனை ஊதி அணைத்து விட வேண்டா.

புதுக்கவிஞர் - வி. சரவண பவானந்தம்,

''தமிழ்
எட்டாத தூரத்தில்
அலங்கார விளக்காய்
இருப்பதை விட கைக்கு
எட்டும் தூரத்தில்
சிமினி விளக்காய்
இருந்து போகட்டும்
அதை அணைக்க

ஏன்
புயலாய்
மாறுகிறீர் ?

என அச்சத்தோடு கேட்ட நிலைமாறி, புதுக்கவிதை ஆக்கம் தரும் நிலையான திருப்பத்திற்கு வந்து கொண்டிருக்கிறது என்பதும் புலப்படுகிறது. விழுமியதொரு சமூக விஞ்ஞானியாக விளங்கிய காந்தியடிகளின் நினைவாக நிகழ்வுறும் கருத்தரங்குகளிலும் புதுக்கவிதை இடம் பெற்றுவருவது அதன் எதிர்கால நிலைபேற்றிற்கு முன்னடையாளமாக அமையும்.



# யாப்பருங்கல விருத்தியும் காரிகையுரையும்

டாக்டர்
சா. கிருட்டிணமூர்த்தி

கிடைக்கப் பெற்றுள்ள யாப்பிலக்கண நூல்களுள் யாப்பருங் கலமும் காரிகையும் முதன்மையானவை. இவ்விரு நூல்களும் உரையுடன் அமைந்தவை. முன்னது விருத்தி என்ற பெயரிலும் பின்னது உரையென்ற பெயரிலும் நிலவுகின்றன. யாப்பருங்கலத்திற்கு அமைந்த விருத்தியும் காரிகைக்கு அமைந்த உரையும் அமைப்பாலும் போக்காலும் வேறுபட்டு நிற்பவை.

இவ்விரு நூல்களுக்குமுள்ள உரைகள், இந்த நூல்கள் தோன்றிய காலத்திற்கு அண்மையில் எழுந்திருக்கக்கூடும் என்பர். இதைப்போன்றே இவ்விரு நூல்களின் ஆசிரியர்கள், உரையாசிரியர்கள் பற்றிய வரையறைகளில் இன்றும் அறிஞர்களிடையே பல்வேறு கருத்துவிளக்கங்கள் நிலவுகின்றன. எனினும், நூலடிப் படையில் யாப்பருங்கலம் காலத்தால் முற்பட்டது என்பதும் காரிகை பிற்பட்டது என்பதும் அனைவரும் ஏற்றுக்கொண்ட கருத்தாகும். உரைகளைப் பொறுத்தமட்டில் காலக்கணிப்பை வலியுறுத்திக் காட்டுவதில் சில சிக்கல்கள் தோன்றுவதை இவ்விரு உரைகளையும் நன்கு ஆராய்தலின் மூலம் உணரமுடியும்.

யாப்பருங்கலப்புறநடை

யாப்பருங்கலத்துள் கூறப்பட்ட இலக்கண வழக்குகள் சில மாறிய நிலையிலும் அவற்றுள் அமைந்த இலக்கணக் கூறுகள் வளர்ந்த நிலையிலும் அவற்றைப் புறம் நின்று கூறவேண்டிய இலக்கண இன்றியமையாமை எழுந்திருக்கக்கூடும். அந்நிலையிலேயே யாப்பருங்கலக் காரிகை எழுந்தது. எனவேதான் இதற்கு யாப்பருங்கலப் புறநடை என்றொரு பெயரும் தோன்றலாயிற்று. ''அவிநயர் யாப்பிற்கு நாலடி நாற்பதுபோல யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய்'' என்று காரிகையின் பாயிரவுரை கூறுவதைக் காணலாம். யாப்பருங்கலத்திற்கு அங்கமாகத் தோன்

றிய இந்நூல் உதாரணம் எடுத்தோதுவதாய் அமைந்தது என்றும் பாயிரவுரை கூறும். எனவே காரிகை இயற்றப்படும் பொழுதே, உதாரணம் எடுத்தோதிய உரையுடனேயே யாக்கப்பட்டிருக்க வேண்டும். இவற்றுள் அமைந்த உதாரண முதனினைப்புக் காரிகைகள் பலவுள்ளும் விதப்புக் கிளவிகள் எடுத்துவிளக்கப் பெறுவதால் இவ்வுண்மை புலனாகும். இந்நிலைகளால் தான் விருத்தியுரை இதனை யாப்பருங்கலப் புறநடை எனச் சுட்டுகின்றது. யாப்பருங்கலப் புறநடை என்றும் (யாப். 32,57, 59, 68, 86, 89) யாப்பருங்கலப் புறநடைக் காரிகை என்றும் (யாப். 85) காரிகை நூற்பாக்கள் யாப்பருங்கலவிருத்தியுள் சுட்டப்பெறுதலைக் காணலாம்.

விருத்தியுள் காரிகை நூற்பாக்கள்

யாப்பருங்கலக் காரிகையில் 38 காரிகைகளும் 21 உதாரண முதனினைப்புக் காரிகைகளும் உள்ளன. இவற்றுள் 27 காரிகைகள் விருத்தியுள் மேற்கோளாக ஆளப்பட்டுள்ளன. இவற்றுள்ளும் 6 உதாரண முதனினைப்புக் காரிகை இடம்பெற்றுள்ளன. இக்காரிகைகள் யாப்பருங்கலப் புறநடை என்று ஐந்தும், யாப்பருங்கலப் புறநடைக் காரிகை என்று ஒன்றும், காரிகை என்று ஆறும் (யாப். 31, 62, 64, 77, 83, 92,), பதம் நெகிழ்ந்து உரைத்துக் கொள்க என்று இரண்டும் (யாப். 41, 52), உதாரண முதனினைப்புக் காரிகைகளாக ஆறும் (யாப். 21, 25, 32, 48. 52) பிறவகையான் ஏழுமாக (யாப். 21, 22, 25, 48, 57, 58) காட்டப்பெற்றுள்ளன. இவற்றை நோக்குகின்றபொழுது விருத்தியுரைக்குக் காலத்தால் முற்பட்ட நிலையில் காரிகை நூற்பாக்கள் விளங்கியிருந்தன என்பது புலனாகும்.

இக்காரிகைகளுள் உதாரண முதனினைப்புக் காரிகை நீங்கலாக ஏனைய விருத்தியுள் இடம்பெறுதலால் காரிகைக்குப் பிறகு விருத்தியுரை தோன்றியிருக்கும் என்று கருத இடமுண்டு. ஆயினும் அறத்தாறிதுவென (யாப். கா. 15), திருமழை உள்ளார் (யாப். கா. 11), திரைத்தவிருது (யாப். கா. 13), தேமா புளிமா (யாப். கா. 7), மாவும் புள்மோனை (யாப். கா. 18) மோனை விகற்பம் (யாப். கா. 20) எனும் யாப்பருங்கலக்காரிகையின் உதாரண முதனினைப்புச் செய்யுட்கள் விருத்தியுள் இடம்பெறுதலைக் கொண்டு காரிகையுரைக்குப் பின் விருத்தி தோன்றியிருக்கும் என்று கொள்வதற்கும் வாய்ப்புண்டாகின்றது.

'மயேச்சுரர் யாப்பே போல உதாரணம் எடுத்தோதி' என்று காரிகையின் பாயிரவுரை கூறுவதைக் கொண்டு காரிகையும் அதன் உரையும் உடன் தோன்றியிருக்க வேண்டும் என்று கொள்வதற்கு விருத்தியுள் இடம்பெற்ற உதாரண முதனினைப்புக் காரிகைகள் மேலும் சான்று பகர்வனவாக அமைகின்றன. இவ்வாறு கொள்ளுவதால், யாப்பருங்கலக்காரிகையுரை தோன்றியகாலத்து, யாப்பருங்கலம் உரையின்றி வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருத வேண்டியுள்ளது.

காரிகையுள் விருத்தி மேற்கோள்

யாப்பருங்கலக் காரிகையுரையுள் பல யாப்பருங்கல நூற்பாக்கள் மேற்கோளாக ஆளப்பட்டுள்ளன. இந்நூற்பாக்களன்றியும், 'விருத்தியுள் காண்க' என நான்கிடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன, "எட்டும் பதினாறும் என்று சொல்லப்பட்ட அம்போதரங்கம் குறையாதே வந்தவாறு யாப்பருங்கல விருத்தியுட் கண்டு கொள்க" (யாப். கா. 38).

"பிறவும் யாப்பருங்கல விருத்தியுட் கண்டு கொள்க"
(யாப். கா. 40)

"வெண்பாவினோடும் ஆசிரியத்தினோடும் வந்தமயங்கிசைக்
கொச்சகக் கலிப்பா யாப்பருங்கல விருத்தியுள் கண்டுகொள்க"
(யாப். கா. 42)

"இவற்றிற்கு இலக்கியம் யாப்பருங்கலவிருத்தியுட் கண்டுகொள்க"
(யாப். கா. 42)

காரிகையுரையுள் காணப்படும் இம் மேற்கோள்கள் ஒரு மயக்கத்தை யுண்டாக்குவது இயல்பே. இவை காரிகையுரைக்கு முற்பட்டது விருத்தியுரை என்ற உணர்வைத் தோற்றுவிப்பதாக அமைகின்றன. 27 காரிகைகளை மேற்கோளாகக் காட்டுவது எங்ஙனம் பொருந்தும்? இவ்வினாவிற்குரிய விடையைக் கீழ்க்காணும் சான்றுகள் மூலம் காணலாம்.

காரிகைக்குப்பின் விருத்தியுரை

ஒன்றை முன்னிறுத்திப் பின்செல்லுகின்ற இலக்கண நூல் அதனின்றும் விளக்கம்பெற அமைவது இயல்பாகும். அவ்வகையில்

காரிகையுரையுள் பல இடங்களில் பெயர் சுட்டப்பெறாமல் காட்டப்பெறும் மேற்கோள்கள் விருத்தியுரையுள் பெயர் சுட்டப் பெற்றுள்ளன.

> ''அளபெடை தனியிரண் டல்வழி ஐஔ
> உளதாம் ஒன்றரை தனிமையும் ஆகும்''
>
> (யாப். கா. 4)

என்ற நூற்பா காரிகையுரையுள் பெயரிடப்பெறாமலிருக்க 'இஃது அவிநயம்' என யாப்பருங்கலத்துள் சுட்டப்பட்டுள்ளது.

> ''வெண்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை
> ஏந்திசைச் செப்பல் என்மனார் புலவர்''
>
> ''இயற்சீர் வெண்டளை யான்வரும் யாப்பைத்
> தூங்கிசைச் செப்பல் என்மனார் புலவர்''
>
> ''வெண்சீர் ஒன்றலும் இயற்சீர் விகற்பமும்
> ஒன்றிய பாட்டே ஒழுங்கிசைச் செப்பல்''

என்ற இந்நூற்பாக்கள் காரிகையுரையுள் நூற்பெயர் சுட்டப்பெற வில்லை (யாப். கா. 22); யாப்பருங்கலத்தில் இவை சங்கயாப்பு என நூற்பெயர் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இவை போன்றே,

> ''வல்லெழுத் தாறோ டெழுவகை யிடத்தும்
> உகரம் அரையாம் யகரமோ டியையின்
> இகரமும் குறுகும் என்மனார் புலவர்'' (யாப். கா. 4)

என்பது 'இஃது அவிநயச் சூத்திரம்' என விருத்தியுள் விளக்கியுரைக் கப்பட்டுள்ளது. இவ்வாறு காரிகை கூறாது விடுத்த நூற்பெயர் களைக் கூறி விளக்குவதோடு மட்டுமன்றிக் காரிகை கூறிய நூற் பெயர்களைத் திருத்திக் கூறும் அளவிலும் விருத்தியுரை அமைந் துள்ளது. அசையினும் சீரினும் (யாப். காப். 17) என்பதைக் காக்கை பாடினியம் என்று காரிகை கூறப் பல்காயம் என்று யாப்பருங்கலம் கூறுகின்றது. இவற்றை நோக்கும்பொழுது காரிகையுரையை முன்னிறுத்தி விருத்தியுரை செல்வது நன்கு விளங்கும்.

காரிகையுரை பலகாலம் எழுதப் பெறாமலேயே பயிற்சியுள் இருந்திருக்க வேண்டும். நூலும் உரையுமாக அமைந்து பயிற்சி யுள் இருந்த காலத்தில்தான் யாப்பருங்கலத்திற்கு விருத்தியுரை எழுதப்பெற்றிருக்கும். காரிகைகளையும் உதாரணச் செய்யுட் களையும் விருத்தி எடுத்தாளுதல் கொண்டு இதனை உணரலாம்.

யாப்பருங்கலத்திற்கு விருத்தியுரை கண்டபின் அவ்வுரையின் வளமும் விரிவும் அதனையே சிறந்ததாகவும் முதன்மையானதாகவும் கருதவைத்தது.

காரிகையுரை

பழைய உரைகளுள் பலவும், பல காலம் எழுத்து வடிவம் பெறாமலிருந்து பின்பு எழுத்துவடிவம் பெற்றன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இறையனார் களவியல் உரை, இளம்பூரணர் உரை போன்றவை இத்தகு தன்மையுடையவை. இவற்றைப் போன்றே யாப்பருங்கலத்திற்கு அங்கமாக விளங்கிய காரிகையுரை பலகாலம் பயிற்றுவிக்கப்பட்டுப் பிறகே எழுத்துவடிவம் பெற்றிருக்க வேண்டும். யாப்பருங்கலவிருத்தி பற்றிய குறிப்பு இந்நிலையிலேயே காரிகையுள் இடம்பெற்றது எனக் கொள்ளலாம். யாப்பருங்கலவிருத்தியின் பரப்பையும் சிறப்பையும் கருதியே பிறகு அவை பற்றிய தொடர்கள் காரிகையுள் எடுத்தாளப்பட்டன. எனவே, காரிகையுள் இடம்பெறும் இக்குறிப்புகளைக் கொண்டு காரிகையுரையை விருத்திக்குப்பின் கொண்டுவருவது பொருந்துவதாகாது என்று கொள்ளலாம்.

நூலும் உரையுமாகக் காரிகை நிலவியது என்பதாலும், 27 காரிகைகள் (உதாரண முதனினைப்புகள் உள்பட) விருத்தியுள் எடுத்தாளப்பட்டுள்ளன என்பதாலும்,காரிகை சுட்டாத நூற்பெயர்களை விருத்தி சுட்டுகிறது என்பதாலும், யாப்பருங்கல விருத்தியுரைக்குக் காலத்தால் முற்பட்டது காரிகையுரை என்று கொள்ளுவது பொருந்தும். இம்முடிவு இவ்விரு நூல்களின் ஆசிரியர்பற்றிய கருத்தை உறுதிசெய்வதற்குத் துணையாகவும் அமைதல் கூடும்.



# தமிழ், தெலுங்குச் சதகங்கள் ஒப்பீடு

டாக்டர்.
பழனியம்மாள்

(தொடர்ச்சி)

**வரலாற்றுச் சதகங்கள் :**

சங்க காலத்திலிருந்தே அரசர்கள், சிற்றரசர்கள், வள்ளல்கள் முதலியோரைச் சிறப்பிக்கும் வாயிலாக அவர்களின் நாடு நகர் முதலியவற்றைச் சிறப்பித்துப் பாடும் மரபினைப் பின்பற்றிப் புலவர்கள் இலக்கியங்களைப் படைத்தனர். அவ்வாறே சதகப் புலவர்களும் மக்கள், மன்னன், வள்ளல், இறைவன் ஆகியோரைப் புகழ்ந்து பாடும் வகையில் அவர்களின் நாடு, நகர், திருத்தலம் ஆகியவைகளைச் சிறப்பித்துச் சதகங்களை இயற்றினர்.

தமிழில் குறவர்களின் பெருமைகளைச் சிறப்பிக்கும் வகையில் குறவஞ்சி இலக்கியங்களும், பள்ளர்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் வகையில் பள்ளு இலக்கியங்களும் தோன்றின. அவ்வாறே வேளாளர்களின் வரலாறுகளையும் பெருமைகளையும் எடுத்துரைக்கும் வகையில் வரலாற்றுச் சதகங்கள் பாடப்பட்டுள்ளன. இவைகளுக்கு மண்டல சதகங்கள் என்ற மற்றொரு பெயரும் உண்டு. தமிழ்ச் சதக இலக்கிய வகையில் முதன் முதலாகத் தோன்றியவை மண்டல சதகங்களே.

அவிநாசி ஆறைகிழார் வேளாளர்களைச் சிறப்பிக்கும் வாயிலாக அவர்கள் வாழ்ந்த கார் மண்டலத்தைச் சிறப்பித்துக் கார் மண்டல சதகத்தைப் பாடினார். இதனை அடியொற்றிப் படிக்காசுப் புலவர் தொண்டை மண்டல வேளாளர்களைச் சிறப்பிக்கும் வாயிலாகத் தொண்டை மண்டல சதகத்தை எழுதினார். இங்ஙனமே வேளாளர் இனத்தைச் சேர்ந்த பிறமண்டலங்களில் வாழ்ந்த புலவர்களும் வேளாளர்களைச் சிறப்பிக்கும் பொருட்டுத் தாம் வாழ்ந்த மண்டலங்களையும் சிறப்பித்துக் கொங்கு மண்டல சதகம், சோழ மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம் ஆகிய மண்டல சதகங்களைப் பாடினார்கள். இவ்வாறு வேளாளர்களின்

புகழ்பாடும் தன்மையில் மண்டல சதகங்கள் பாடப்பட்டிருப்பதை அறிந்த மாத்ருபூதையரவர்கள் தம் இனமாகிய ஆயர்களைச் சிறப்பிக்கும் பொருட்டு அவர்கள் வாழ்ந்த ஆயர்பாடி, கோகுலம் ஆகிய பகுதிகளைச் சிறப்பித்து நந்த மண்டல சதகத்தைப் பாடினார். இம்மரபு நம் தமிழகத்தில் மட்டுமன்றி ஈழத்திற்கும் பரவியது. ஈழநாட்டு மக்களைச் சிறப்பிக்கும் வாயிலாக அவர்கள் வாழ்ந்த ஈழ நாட்டைப் புகழ்ந்து ஈழமண்டல சதகம் பாடப்பட்டது. இவ்வாறு வரலாறு கூறுவனவாக அமைந்த சதகங்கள் எம்மண்டலத்தைப் பாடுவனவாக அமைந்துள்ளனவோ அம்மண்டலத்தின் பெயராலேயே அழைக்கப் பட்டன.

தெலுங்கு நாட்டு வரலாற்றில் மறக்க இயலாத. நிகழ்ச்சிகளை மட்டும் வரலாற்றுச் சதகங்கள் படம்பிடித்துக் காட்டின. நாட்டில் நடைபெற்ற போர்களையும், அவற்றால் விளைந்த அழிவுகளையும் நாட்டின் இழிநிலையையும் கண்ட கவிஞர்கள் அந்நிகழ்ச்சிகளைச் சதகவடிவில் பாடினர். ஔரங்கசீபு ஆட்சியின் போது ஆந்திராவிலும் பிறபகுதிகளிலும் உள்ள இந்துக் கோயில்கள் கொள்ளையடிக்கப் பட்டதோடு அவை புலால் கூடங்களாகவும் மாற்றப்பட்டன. இச்செய்தியை வேல்சூரி விசன்னகவி விசுவேசுவர சதகத்தில் பாடியுள்ளார்.

நிசாமுல்முக்கு என்ற மொகலாய மன்னர் ஆட்சியில் ஔரங்கசீப்பின் தூதுவனான பக்கீர் அலிகான் ஆந்திரநாட்டில் பலப்பல கோயில்களை அழித்தான். அவைகளுள் ஒன்று பெசவாடா அருகேயுள்ள சிம்மாத்திரி என்னுமிடத்தில் அமைந்திருந்த நரசிம்மர் கோயிலாகும். இக்கோயிலின் அழிவைக் கண்டு வருந்திய கோகுலப்பாட்டி கூர்மநாதகவி சிம்மாத்திரி நரசிம்ம சதகத்தை இயற்றினார். இச்சதகத்தில் மொகலாயர்கள் கோயிலைக் கைப்பற்றி மாசுபடுத்திய இழிசெயல்களும் கிராமங்களில் பசுக்கள் வதைக்கப்பட்ட கொடூரங்களும் கூறப்பட்டுள்ளன.

உலகப்போர், இந்திய விடுதலைப் போராட்டம் போன்ற நிகழ்ச்சிகளும் சதகங்களில் இடம் பெற்றுள்ளன. உலகப் போர் முதல் இந்திய விடுதலைப் போராட்டம் வரை இந்தியாவில் நிலவிய நிலைமைகளை எல்லாம் ரொம்பி சர்வ கிருஷ்ணமாச்சாரியார் விப்பலவலத்மக காத்தியானி சதகத்தில் விளக்கியுள்ளார். இதே போல இந்திய சுதந்திரப் போர், உப்பு சத்தியாக்கிரகம்,

வட்டமேசை மாநாடு, ஆந்திரர்கள் தேசிய இயக்கத்தில் பங்கேற்றல் போன்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்துப் பாரதாம்பிக சதகமாகப் பாடியவர் கரிகபாட்டி மல்லாவதானி ஆவார். ஆந்திரர்கள் மொழி வாரி மாநிலம் பிரிக்க வேண்டுமெனப் பெரும் போராட்டத்தை நடத்தினர். இப்போராட்டம் பற்றிக் கவிஞர் காசாரபுதாத்தாரா அவர்கள் சயாந்திர சதகத்தில் எடுத்துக் கூறியுள்ளார்.

தமிழ் வரலாற்றுச் சதகங்கள் குறிப்பிட்ட இனத்தையும் நாட்டையும் சிறப்பிக்கும் வகையில் பாடப்பட்டுள்ளன. அதனால் அக்காலத்தில் சாதிப் பாகுபாடு பெற்றிருந்த செல்வாக்கினை அறிய முடிகின்றது. ஆனால், தெலுங்கு வரலாற்றுச் சதகங்கள் நாட்டில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகளை மட்டுமே பாடு பொருளாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன; மக்களின் மனத்தில் தேசிய உணர்வையும் ஒருமைப் பாட்டையும் எழுச்சியையும் ஏற்படுத்தும் வகையில் பாடப் பட்டுள்ளன. இவ்வரலாற்றுச் சதகங்கள் நாட்டு வரலாற்றிற்குத் துணை செய்யும் என்பது குறிப்பிடத் தக்கது.

**கதைச் சதகங்கள்:**

சங்க காலத்திற்குப் பின் இலக்கியங்கள் யாவும் பெருங் காப்பியங்களாகப் படைக்கப்பட்டன. நாளடைவில் காலத்தின் சூழலுக்கேற்ப மக்களின் மனநிலை மாறுபட்ட காரணத்தால் இலக்கியங்கள் சிறுகாப்பியங்களாகப் பாடப்பட்டன. இம்மரபினைப் பின்பற்றிய சதகப் புலவர்கள் காப்பியங்களில் கூறப்பட்டுள்ள செய்திகளை நூறு பாடல்களில் சுருக்கிச் சதகங்களாக நூல் செய்தனர்.

தமிழில் கிருட்டிணமூர்த்தி ஐயர் சிறீமந் நடராசாங்கித மகாபாரத சதகத்தைப் பாடினார். இச்சதகம் வியாச பாரதத்தின் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டும் வில்லிபுத்தூரார் பாரதத்தைத் தழுவியும் இயற்றப்பட்ட நூலாகும். தில்லையில் கோயில் கொண்டுள்ள நடராசப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுபாடப்பட்டிருப்பதாலும், மகாபாரதத்தின் சுருக்க நூலாகத் திகழ்வதாலும் இவ்விரு பெயர்களையும் இணைத்து ''ஸ்ரீமந்நடராஜாங்கித மகாபாரத சதகம்'' என அழைக்கப்படுகின்றது. நூலாசிரியர் நூறுபாடல்களையும் பதினான்கு பருவங்களாகப் பாகுபாடு செய்துள்ளார். ஒவ்வொரு

பாடலுக்கும் பாடலுக்கேற்ற தலைப்பும், கருத்துக் கேற்ற நீதியும் கூறப்பட்டுள்ளன. நீதிகளை உணர்த்துவதற்காகப் பாரதக்கதை நிகழ்ச்சிகள் பாடல்தோறும் இடம் பெற்றுள்ளன.

சேக்கிழார் பெருமான் விரிவாகத் திருத்தொண்டர் புராணத்தைப் பாடினார். கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் சுருக்கமாகத் திருத்தொண்டர் புராணசாரம் என்னும் நூலை அருளினார். அவ்வாறே மலைக் கொழுந்து நாவலர் திருத்தொண்டர் சதகத்தைப் பாடினார். திருத்தொண்டர் சதகம் என்பது கயிலைமலையில் வீற்றிருக்கும் சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, சிவனடியார்களின் வரலாறுகளையும் மாணிக்க மலையின் சிறப்புக்களையும் சுருக்கமாகக் கூறும் நூலாகும்.

முத்தப்ப செட்டியார் பாடிய செயங்கொண்டார் சதகத்தில் புராணக் கதைகளும், வரலாற்றுக் கதைகளும் காணப்படுகின்றன. இக்கதைகளின் வாயிலாக மக்களுக்கு அறிவுறுத்தவேண்டிய நீதி நெறிகள் விளக்கம் பெற்றுள்ளன. வீரராகவ சதகத்தில் வீரராகவ தாசர் நீதிகளை விளக்கப் புராண இதிகாசக் கதைகளையும் புலவர் வரலாற்றுக் கதைகளையும் கூறியுள்ளார். இச் சதகத்தில் மகாபாரதத்தில் உள்ள ஏகலைவன் கதை, புராணத்தில் உள்ள அரிச்சந்திரன் கதை இவை போன்ற பல கதைகளின் வாயிலாகக் குருதட்சணை வழங்க வேண்டும், உண்மை பேச வேண்டும் என்பன போன்ற நீதிநெறிகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு பாரதம், இராமாயணம், கந்தபுராணம் ஆகிய கதைக் குறிப்புக்களை நூறுபாடல்களில் பாடி இறைவனைத் துதிக்கும் முறையில் அமைந்தவை அவ் இதிகாசங்களின் பெயரால் இராமாயண சதகம், கந்தபுராண சதகம் என வழங்கப்படுகின்றன.

தெலுங்குச் சதகங்களிலும் நீதிகளைக் கூறுவதற்காகக் கதை கூறும் உத்தி கையாளப்பட்டுள்ளது. விரிந்த இராமாயணக் கதையின் சுருக்கமாக சூலூரி இலக்குமணக்கவி எழுதிய முகுந்த ராகவ சதகமும், முத்துநரசக்கவி எழுதிய பிரசன்ன ராகவ சதகமும், மங்கிப்பூடி வீரய்யா சித்தாந்தி எழுதிய ராமாயண சங்கிரக சதகமும் திகழ்கின்றன.

புவனகிரி இலக்குமிகாந்தம்மா மகாபாரதக் கதையைச் சுருக்கிப் பாரத கிருஷ்ண சதகமாகப் பாடியுள்ளார். தொர்லபாடி

புருசோத்தம சர்மா எழுதிய ''பாகவத பிரதம ஸ்கந்த சதகமும்' சூலூரி துளசியம்மா எழுதிய பாகவத கிருஷ்ணுடு சதகமும் பாகவதக் கதைகளைச் சுருக்கி எழுதப்பட்ட சதகநூல்களாகும். தமிழில் உள்ள மீனாட்சி சதகத்தைப் போலவே தெலுங்கிலும் மதுரை மீனாட்சி கதையைச் சுருக்கிக் கூறும் நூலாக மீனாட்சி சதகம் பாடப்பட்டுள்ளது. சூரியனுடைய திருமணத்தைப் பற்றிய கதையை மார்த்தாண்ட சதகம் எடுத்துரைக்கிறது.

இவ்வாறு தமிழிலும் தெலுங்கிலும் இராமாயண, மகாபாரத, புராண, பாகவதக் கதைகள் சதக நூல்களாகப் படைக்கப் பட்டுள்ளன.

தத்துவச் சதகங்கள்

இவ்வுலக வாழ்க்கை துன்பமயமானது; இவ்வுலகமும் செல்வமும் யாக்கையும் நிலையற்றவை; அதனால், இறையருள் பெற்று வீடுபேறடைவதே சிறந்த நெறி என்பன போன்ற தத்துவக் கருத்துக்களை மக்களுக்குப் புரிய வைக்கும் வகையில் சதகங்கள் பாடப்பட்டுள்ளன.

தமிழில் யாக்கை நிலையாமையைப் பற்றிக் குருபாத தாசர் உலகில் வாழ்ந்தவர்கள் இறவாமல் இல்லை; தேடியதை வைத்தவரும் இல்லை; பனியை நம்பி ஏர்பூட்டும் கதையெனப் பாழான உடலை நம்பிப் பார்மீது இன்னும் வாழ்வோம் என்று பலகோடி எண்ணங்களால் மாய்வதே அல்லாமல் இறைவனின் திருவடிகளை வணங்கி முக்தி பெற வேண்டும்' என்று குமரேச சதகத்தில் வலியுறுத்தியுள்ளார். சபாபதி முதலியாரும் அருணாசல சதகத்தில்,

''பொய்யானதே குடிகொண்டது
புழுவானதே நெளிகின்றது
சையோகமே விளைகின்றது
சவமாகி மேல் விழுகின்றது''

என்று உடலை இழித்துரைத்துப் பாடி இறையருள் வேண்டுகின்றார். இதே செய்தியைத் திருவேங்கட சதகமும், அறப்பளீசுர சதகமும் கூறிச் செல்கின்றன. வாழ்க்கை நிலையாமையைப் பற்றி அம்பல வாணக் கவிராயர்

"உடல் ஒரு நீர்க்குமிழி; வாழ்வோ மலையைச் சுற்றியுள்ள கானகத்தில் ஓடும் ஆற்றுவெள்ளம். மக்களும், உறவினரும், வீடும், இல்லாளும், யாவும் பேய்த் தேரில் காணப்படும் வெள்ளம். இளமையும் அழகும் மஞ்சள் வெயில். உயிரோ திறந்த வெளியில் ஏற்றப்பட்ட விளக்கு என எண்ணி வீணில் காலத்தைக் கழிக்காமல் இறைவனை நினைந்து வழிபட வேண்டும்" என்று கூறியுள்ளார்.

வீடுபேறு அடைவதற்கான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறிமுறைகளையும், நடராச சதகம் விளக்கிச் செல்கிறது. கயிலாசநாதர் சதகத்தில், தொண்ணூற்றாறு வகைத் தத்துவங்கள், மரணயோகம், தரித்திர யோகம், சூரிய கலை, சந்திரகலை, உயிர்விடு நாளின் தோசம், கெர்ப்போட்ட நாட்கள், அசுவலட்சணம், சாமுத்திரிகா இலட்சணம் முதலிய சோதிடக் கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

தெலுங்குப் புலவர்கள் பாடிய சிவமுகுந்த சதகம், சம்பங்கி மன்ன சதகம், தாத்தாத்ரேய சதகம் முதலிய நூல்களில் நில்லா உலகின் தன்மை, யோக சாத்திரங்கள், சித்தாந்தங்கள் போன்ற செய்திகள் கூறப்பட்டுள்ளன. இத்தத்துவச் சதகங்களில் நாராயண சதகமே தொன்மையானதாகவும், சிறந்ததாகவும் காணப்படுகிறது. இந்நூலாசிரியர், 'மனிதப் பிறவியே அரிய பிறவி; ஆதலால் இப்பிறப்பில் வீடுபேறடையச் செய்யும் முயற்சியே ஞானியின் இலக்கணமாகும்' என்று கூறியுள்ளார். தத்துவங்களைப் பற்றி மிகுதியாகப் பாடியவர்களுள் வேமனா குறிப்பிடத் தக்கவர். மக்களின் அளவற்ற ஆசைகளின் இழி நிலையை,

''ஆசைக் கயிறை யறுத்தெறிய மாட்டாரேற்
பேசுற்ற வீடு பெறலரிதே - ஆசையுறில்
இச்சித்தூண் சிக்கி யெலியழிவு மாறழிவர்
பிச்சகன்ற வேமா பெரிது"

என்று பாடி மக்களுக்கு வீடுபேறடைய வேண்டியதன் தேவையை வலியுறுத்தியுள்ளார். மேலும் ஆத்ம சுத்தியின்றிக் கொண்டாடும் ஆசாரம் துலக்காத பாத்திரத்தில் சமைக்கும் சமையல் போன்று மனத்தில் தூய்மையின்றிச் செய்யும் சிவபூசை எதற்கு? இவை யாவும் பயனற்றவை என்று அறிவுறுத்தியுள்ளார். இதைத்தவிர மீசால வெங்கய்யா எழுதிய 'ஹம்ச சதகம்', நாதெள்ளா புருசோத்தமக்கவி எழுதிய பூர்வகர்ம சதகம், சக்ககவி எழுதிய பஞ்சீகரண

பத்ய சதகம், நாராயணதாஸக்கவி எழுதிய 'நிஸ்ஸம்ஸ யாத்மக சதகம்' முதலியன தத்துவச் சதகங்களில் சிறப்புடையன.

வசைச் சதகங்கள்

சங்ககாலத்தில் மன்னர்கள் தவறு செய்தபொழுது புலவர்கள் செவியறிவுறூஉ என்ற துறையமைந்த பாடல்களைப் பாடித் திருத்தினார்கள். அதேபோலச் சதகப் புலவர்களும் சமுதாயத்தில் தவறு செய்த மக்களை இடித்துரைக்கும் வகையில் பாடல்களைப் பாடினர். கவிஞர்கள் தாம் வாழ்ந்த காலத்தில் சமுதாயத்தில் நிலவிய தீமைகளால் மக்கள் அடைந்த துயரங்களைக் கண்டு வருந்தி இத்தகைய வசைச் சதகங்களைப் படைத்தனர். வசைச் சதகங்களில் நேரடியாகவும், மறைமுகமாகவும், நகைச்சுவையாக வும் நீதிக்கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

தமிழில் குருபாததாசர், அறஞ்செய்யாது, பிறரையும் அறஞ் செய்ய விடாது தடுத்து நிறுத்தும் அற்பர்களை,

''மடுவினில் கஞ்சிமலர் உண்டு ஒருவரும் அணுகாமல்
வன்முதலை அங்கிருக்கும்
மலையினில் தேனுண்டு சென்றொருவர் கிட்டாமல்
மருவி அதில் வண்டிருக்கும்
குடிமல்கி வாழ்கின்ற வீட்டினில் செல்லாது
குரைநாய்கள் அங்கிருக்கும்
கொடுக்குந் தியாகி உண்டு இடையூறு பேசும்
கொடும்பாவி உண்டு கண்டாய்

என்று கொடும்பாவியெனக் கூறிச் சாடியுள்ளார். மேலும் மக்கட் பண்பற்ற மனிதர்களை மாக்கள் என வசைமாரி பொழியும் தன்மையை,

தான் பிடித்தது பிடிப்பென்று மேலவர் புத்தி
தள்ளிச் செய்வோர் குரங்கு
சபையில் குறிப்பறிய மாட்டாமல் நின்றவர்
தாம் பயனிலாத மரமாம்
வீம்பினால் எளியவரை யெதிர் பண்ணி நிற்கும் ஒரு
வெறியர் குரைஞமலி யாவர்

மிகநாடி வருவோர் முகம் பார்த்திடாத லோபர்
மேன்மையில்லாத கழுதை''

என்ற பாடல் புலப்படுத்துகின்றது, திருவேங்கட சதகம் தவறு செய்யும் மனிதர்களை மூர்க்கன், மூடன், துட்டன், குரூரன், பாதகன் என்று,

திரளான நன்று பல செய்தவர்க்கே இடர்கள்
செய்பவன் மகா பாதகன்
ஐயா எனப் பணிந்தாலுமே கோபம்
அடங்காதவன் குரூரன்
அனுதினம் தீமை புரிவோன் எந்தநாளிலும்
அடங்காத சண்டாளனாம்''

என்ற பாடலில் சொல்லம்புகளை வீசியுள்ளது. இவைகளைத் தவிர சமுதாயத்தில் வாழ்ந்த தீயோர், துட்டர், இராட்சதர், பூதர், பாபிகள், உலுத்தர், அற்பர், விலைமகளிர், தீயபெண்டிர், அநாகரி கப்பெண் முதலியோர் இயல்புகளைப் புலவர்கள் நகைச்சுவை ததும்ப இடித்துக் கூறியுள்ளார்கள்.

தெலுங்கில் வசைச் சதகங்களை எழுதுவதில் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சௌடப்பா முதலிடம் பெறுகின்றார். இவருடைய பாடல்கள் சாட்டையடிபோலத் தாம் கூறவந்த கருத்தை வலியுறுத்தும் தன்மையன. இவருக்குப் பின்வந்த கூசி மஞ்சித் திம்மக்கவி தம்காலத்தில் வாழ்ந்த செல்வந்தர்களின் மன நிலையையும், சமூகத் தீமைகளையும் திறமையற்ற போலிக் கவி ஞர்களையும் சாடியுள்ளார். பார்க்கவ சதகம், குக்குடேசுவர சதகம் ஆகிய இரண்டும் கூசிமஞ்சித் திம்மக்கவியால் பாடப்பட்ட வசைச் சதகங்களாகும்.

கூசிமஞ்சி சக்ககவியும் செல்வர்களின் அற்பக் குணங்களைச் சாடும் வகையில் பக்த மந்தார சதகத்தை எழுதியுள்ளார். தன்னை இழிவு படுத்திய சீதாராமராசு என்ற விசயநகர மன்னனின் தீய குணங்களைக் கண்டிக்கும் வகையில் அடிதமு சூரக்கவி இராம லிங்கேச சதகத்தைப் பாடியுள்ளார். இந்நூலில்,

''வலிய காளைக்கு இல்லையோ கடுங்குரல்
வாய்த்த செல்வம் இல்லையோ வேசியர்க்கு

நியாய வழியில் நடக்காத மன்னனுக்கு
எவ்வளவு அலங்காரமிருந்தும் என்ன பயன்"

என்ற பாடல் மன்னனின் நேர்மையற்ற செயலை எள்ளி நகை யாடுகிறது.

மனிதனைத் தனிப்பட்ட முறையில் குறை கூறாது, அவன் செய்த தவற்றுக்காகச் சமுதாயம் முழுவதையும் இடித்துரைக்கும் வகையில் வேங்கடகவி மதனகோபால் சதகத்தையும் இயற்றினார்.

தெலுங்கு நாட்டில் இந்த நூற்றாண்டிலும் அரசியலையும் சமூகத்தையும் விமர்சிக்கும் வகையில் வசைச் சதகங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன ஸ்ரீ ஸ்ரீ, எழுதிய சிரிசிரி முவ்வா சதகம் பாலகங்காதரராவ் எழுதிய கங்கன்ன சதகம், சுந்தரராம ரெட்டி எழுதிய சுந்தரய்ய சூக்கலு சதகம் ஆகியன இக்காலத்தில் தோன் றிய வசைச் சதகங்கள் ஆகும்.

**மொழி பெயர்ப்புச் சதகங்கள்:**

சதக இலக்கியங்கள் முதன் முதலாக வடமொழியில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் தோன்றின. பின்னர் கி.பி 11 ஆம் நூற் றாண்டில் தமிழிலும், கி. பி 13 ஆம் நூற்றாண்டில் தெலுங்கிலும் பாடப்பட்டு வளர்ச்சி அடைந்துள்ளன. அனைத்து மொழிச் சதகங்களும் ஏறக்குறைய ஒரே அமைப்புடையன. அதனால் வடமொழிச் சதகங்கள் சில தமிழிலும் தெலுங்கிலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. தெலுங்குச் சதகங்களைத் தமிழ்ப்புல வர்கள் தமிழில் மொழி பெயர்த்தார்கள். வைணவ சமயப் புல வர்கள் சமயப் பற்றினால் தமிழ் இலக்கியங்களைத் தெலுங்கில் சதகவடிவில் மொழி பெயர்த்தனர்.

வடமொழியில் பர்த்ருஹரி பாடிய நீதி சதகம், சிருங்கார சதகம், வைராக்ய சதகம் ஆகிய மூன்றும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. நீதி சதகத்தை ம.மாணிக்கவாசகம் பிள்ளை தமிழில் மொழி பெயர்த்துள்ளார். அச்சதகம் மூலநூலாசிரியரின் பெயருடன் இணைந்து பர்த்ருஹரி நீதி சதகம் என்று அழைக்கப் படுகிறது. மொழிபெயர்ப்பு நூலாதலால் தமிழ்ச் சதகங்களின் அமைப்பிலிருந்து சற்று வேறுபடுகிறது. பிற நீதிச் சதகங்ளைப் போல நூல்முழுவதும் ஒரே யாப்பில் பாடப்படவில்லை. ஒவ்வொரு செய்யுளின் ஈற்றடியில் மகுட அமைப்புக் காணப்படவில்லை.

பத்துப் பத்துப் பாடல்களாகப் பத்துத் தலைப்புகளின் கீழ் நூறு பாடல்களும் அமைந்துள்ளன. பாட்டுடைத் தலைவன் இன்றியே நேரடியாக மக்களுக்கு வேண்டிய நீதிக் கருத்துக்கள் உரைக்கப் பட்டுள்ளன. இதேபோல சுவாமிநாத தேசிகர் சிருங்கார சதகத்தையும், வைராக்கிய சதகத்தையும் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார். வைராக்கிய சதகத்தை சாந்தலிங்க சுவாமிகளும் மொழிப்படுத்தியுள்ளார்.

வடமொழியில் மனுபாடிய நீதிசதகம் திருவெண்ணெய் நல்லூர் இராசப்ப உபாத்தியாயரால் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. மனுநீதி சதகத்தில் காப்பு, அவையடக்கச் செய்யுட்கள் நீங்கலாக நூறு ஆசிரிய விருத்தப்பாடல்கள் அமைந்துள்ளன. நூலின் தலைப்புக்கேற்றவாறு மகுட அமைப்புக் காணப்படவில்லை. மூலநூலாசிரியர் பெயரால் மனுநீதி சதகம் என்று அழைக்கப்படுகின்றது. மனு, பிதாமகன், காத்தியாயன் போன்ற சான்றோர்கள் கூறிய நீதி நெறிகளின் வாயிலாக நீதிக்கருத்துக்கள் விளக்கப் பட்டுள்ளன.

சுமதீ சதகம் என்பது தெலுங்கிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட நூலாகும். சுமதீ என்பதற்கு 'நல்ல புத்தியை உடையவனே' என்பது பொருளாகும். ஆசிரியர் பாட்டுடைத் தலைவனை நல்ல புத்தியை உடையவனே என்று விளித்துக் கூறியுள்ளார். கடவுள் வாழ்த்துச் செய்யுளுடன் 110 பாடல்கள் காணப்படுகின்றன. இந்நூலினை தமிழ்ப்படுத்தியவர் சமரபுரி முதலியார் ஆவார்.

தெலுங்கு இலக்குமணக்கவி வடமொழியில் பர்த்ருஹரி எழுதிய மூன்று சதகங்களையும் சுபாசித திரிசதி என்ற பெயரில் மொழி பெயர்த்துள்ளார். அதேபோல வடமொழியில் மயூரக்கவி எழுதிய சூரிய சதகமும் சங்கராச்சாரியாரின் சிவானந்தலஹரி சௌந்தர்யலஹரி ஆகியனவும் தெலுங்கில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

தமிழில் வைணவ சமய வேதமாகக் கருதப் படுவது நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமாகும். நம்மாழ்வாரின் திருவாய் மொழியைத் தெலுங்கில் மொழி பெயர்த்துள்ளனர். எனினும்,

மேடே பல்லி வேங்கட ரமணாச்சார்யுலு மொழி பெயர்த்துள்ள ஆந்திர கீர்வாண சடகோப சகஸ்ரமு என்ற நூலே சிறப்புடைய தென முதலிடம் பெறுகின்றது. தமிழில் ஆழ்வார்கள் பாடிய நாலாயிரதிவ்வியப் பிரபந்தத்தின் சில பகுதிகளை மட்டும் தெலுங்கில் சதகவடிவில் பாடியவரும் மேடேபல்லி வேங்கட ரமணாச்சார்யுலுவே.

ஆய்வு முடிவுகள்:

சதக இலக்கியங்கள் முதன் முதலாக வடமொழியில் தோன்றின. பின்னரே தமிழிலும் தெலுங்கிலும் பாடப்பட்டன.

நூறு பாடல்களைக் கொண்ட நூல் சதகம் எனப்படும். ஆனால் தமிழிலும் தெலுங்கிலும் பாடல் எண்ணிக்கை நூறு என்ற வரை யறையைக் கடந்துள்ளது.

மகுட அமைப்புப் பெறுவதில் தமிழ், தெலுங்குச் சதகங்கள் ஒன்று பட்டுக் காணப்படுகின்றன.

தமிழ், தெலுங்குச் சதகப் பாடல்கள் ஒவ்வொன்றும் தனிப் பாட லாகவும், ஒரு தனிக் கருத்தைக் கூறுவதாகவும், தன்னளவில் முழுமை உடையதாகவும் உள்ளது.

ஒரு சதகத்தில் உள்ள எல்லாப் பாடல்களும் ஒரே யாப்பில் பாடப் பட்டுள்ள ஒற்றுமையை இருமொழிச் சதகங்களிலும் காணலாம்.

சதகம் என்ற சொல் தோன்றிய பின்னரே சதக இலக்கணங்கள் யாவும் பொருந்திய சதக நூல்கள் தோற்றம் பெற்றுள்ளன.

தமிழில் முதலில் தோன்றிய சதகம் வரலாற்றுச் சதகம். தெலுங் கில் முதலில் தோன்றிய சதகம் வீரசைவசதகம். இருமொழியிலும் தோன்றிய முதல் இரு சதகங்களும் பாடு பொருள் அமைப்பில் வேறுபட்டுள்ளன.

திருமாலைத் துதிக்கும் துதிச் சதகங்கள் தமிழை விடத் தெலுங்கில் அதிகமாகத் தோன்றியுள்ளன.

தமிழில் தேவியரைப் பாடும் சதகங்கள் யாவும் உமையம்மையின் புகழ்பாடும் துதிச்சதகங்களாகவே அமைந்துள்ளன.

உமாதேவியோடு சரசுவதியையும், இலக்குமியையும் துதிக்கும் சதகங்கள் தெலுங்கில் காணப்படுகின்றன.

இருமொழிப் புலவர்களும் இறையோடு வைத்து எண்ணத்தக்க அடியார்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு சதகங் களை இயற்றியுள்ளார்கள். இருமொழியிலும் துதிக்கப்பட்ட அடி யார்கள் சைவசமயத்தைச் சார்ந்தவர்கள் என்பது ஒற்றுமையுடைய செய்தியாகும்.

தமிழ் வரலாற்றுச் சதகங்கள் குறிப்பிட்ட இனத்தையும் நாட்டை யும் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளன. தெலுங்கு வரலாற்றுச் சதகங் கள் மக்களின் மனத்தில் தேசிய உணர்வையும் ஒற்றுமையையும் எழுச்சியையும் !ஏற்படுத்தும் வகையில் போர் நிகழ்ச்சிகளையும் சமுதாயச் சீரழிவையும் வெளிப்படுத்துகின்றன.

தமிழிலும் தெலுங்கிலும் இராமாயண, மகாபாரத, புராண, பாக வதக் கதைகள் நூறுபாடல்களில் சதகவடிவில் பாடப்பட்டுள்ளன.

பொதுவாகத் தமிழ், தெலுங்குச் சதகங்கள் பெயர் அமைப்பிலும் பாடுபொருள் அமைப்பிலும் ஒன்றுபட்டுள்ளன.

(முற்றும்.)





# கம்பனின் உலகளாவிய பார்வை

பேரா. டாக்டர்
நா. பாலுசாமி

கம்பன் உலகப் பெருங்கவிஞன்; கவிச்சக்கரவர்த்தி என்று பாராட்டப்பெறுபவன். அவன் பாட எடுத்துக் கொண்ட கதை பழங்கதை; இராமன் பற்றிய கதை; வால்மீகி அருளிய கதை. இக்கதை கம்பன் கைப்பட்டதும் பேரழகு பெற்றுவிட்டது. கம்ப ராமாயணம் ஒரு பார காவியம். கதைமாந்தர்கள் வாயிலாகக் கம்பன் பல்வேறு வாழ்வியற் கருத்துக்களை வாரி வழங்கியுள்ளான். அரசியல், பொருளியல், சமூகவியல், பண்பாட்டியல், கலையியல், உளவியல், முருகியல் போன்ற பல்வேறு கலைத்துறைகள் இவனது படைப்பில் பட்டை தீட்டப் பெற்று ஒளிர்கின்றன. இவன் தெரிவிக்கும் கருத்துக்கள் குறிப்பிட்ட ஒரு நாட்டிற்கு மட்டும் உரியவை அல்ல; ஓரினத்திற்கு மட்டும் உரியவை அல்ல; ஒரு சமுதாயத்திற்கு மட்டும் உரியவை அல்ல; இவை மனிதகுலம் முழுமைக்கும் பொருந்தும். இவனது பார்வை உலகளாவியது.

கம்பன் தமிழ் நாட்டில் பிறந்தவன்; வாழ்ந்தவன். தமிழ் மொழிப் பற்றும், தமிழ்நாட்டுப் பற்றும் மிக்கவன்; தமிழ்ப்பண் பாட்டில் தோய்ந்தவன். எனினும், இவனது மனம் குறுகிய வட்டத் தில் அடங்கிவிடாமல் மலையென உயர்ந்துள்ளது; விண்ணென விரிந்துள்ளது; மண்ணெனப் பரந்துள்ளது. தமிழ் இலக்கிய வர லாற்றில் சிவனுக்குத் தனி இடம் உண்டு. சங்க காலத்திற்கும் இவன் வாழ்ந்த இடைக்காலத்திற்கும் இடையே இணைப்புப் பாலமாக விளங்குபவன் இவன். தான் எடுத்துக் கொண்டது தொடர்கதையாயினும், சங்க இலக்கியக் கூறுகளாகிய செறிவு, நெகிழ்வு, சொல்லாட்சி, பொருட்புலப்பாடு முதலியன இவனது படைப்பில் நன்கு அமைந்துள்ளன.

கம்பன் தமிழ் கன்னித்தமிழ்; கனிந்த தமிழ்; செவ்விய மதுரம் சேர்ந்த சீரிய, கூரிய தீஞ்சொல் தமிழ். இவன் கவிதை

நவில்தொறும் நவில்தொறும் நயம் பயப்பது; பயில்தொறும் பயில் தொறும் பயன் அளிப்பது; இது பற்றியே தேசிய கவி பாரதியார்,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை;
உண்மை; வெறும் புகழ்ச்சி யில்லை"

எனப் புகழ்ந்துள்ளார். "இனியொரு கம்பனும் வருவானோ, இப் படியும் கவி தருவானோ" என்று நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை யும் பாராட்டியுள்ளார். இவனோடு ஒப்பவைத்து மதிக்கப்படும் தகுதியுடைய பிறகவிஞர்கள் வடமொழிக் காளிதாசன், ஆங்கிலப் பெருங்கவிஞன் மில்டன், நாடகப் பேராசான் செகப்பிரியர் போன்றோர் ஆவர்.

நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும்:

கம்பனின் உலகளாவிய பார்வை ஆகாயத் தாமரை அன்று; தடாகத் தாமரையாகும். உண்மையான உலகப் பார்வை ஒருவ னது நாட்டுப் பற்றையும், மொழிப்பற்றையும், அடிப்படையாகக் கொண்டே வளரமுடியும். பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தவை. நாட்டுப் பற்று, மொழிப் பற்று ஆகிய அசைவிலா அடிப்படை மீது எழுந்த எழில் மாடமே கம்பனது உலகளாவிய பார்வை. பரதன் கோசல நாடு நீங்கி, கங்கைக் கரையை அடைகிறான். கோசலத்தை அணி செய்யும் சரயு நதி கம்பனுக்குக் காவிரி ஆறாகக் காட்சியளிக்கிறது. வயல் கள் சூழ்ந்த கோசல நாட்டைப் பரதன் கடந்து செல்கிறான். அந்நிகழ்ச்சியைக் குறிப்பிடும் கம்பன், 'காவிரி நாடு அன்ன கழனி நாடு ஒரீஇ' என்று கூறுவான். காவிரி பாயும் சோழ நாடு கம்ப னின் தாயகம் அன்றோ?

அனுமன் முதலிய வானர வீரர் சீதையைக் காண்பான் வேண்டித் தென் திசைச் செலவு மேற்கொள்கின்றனர். அப் பொழுது சுக்கிரீவன் வழி கூறி விடை தருகிறான். அவர்கள் செல்லும் வழியில் திருவேங்கடத்தைக் கடந்தவுடன் தொண்டை நாடு, சோணாடு, மலைநாடு, தென்பாண்டி நாடு முதலியன தோன்றும் என்கிறான். இது பற்றி விவரிக்கும் கம்பன்,

"துறக்கம் உற்றார் மனம் என்ன, துறைகெழு நீர்ச்
சோணாடு கடந்தால், தொல்லை
மறக்கம் உற்றார் அதன் அயலே மறைந்து உறைவர்;
அவ்வழி நீர்வல்லை ஏகி,
உறக்கம் உற்றார் கனவு உற்றார் எனும்
உணர்வினோடும்
ஒதுங்கி, மணியால் ஓங்கல்
பிறக்கம் உற்ற மலைநாடு நாடி, அகன்
தமிழ்நாட்டுப் பெயர்திர் மாதோ"

என்று தமிழ் நாட்டையும், தான் பிறந்த சோணாட்டையும் புகழ்ந்து மகிழ்கிறான். மேலும், பாண்டி நாட்டுப் பொதிகை மலையில் அகத்திய முனிவன் தங்கித் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாகத் தமிழ் வளர்க்கும் சீர்மையை,

"தென் தமிழ்நாட்டு அகன் பொதியில் திருமுனிவன்
தமிழ்ச்சங்கம் சேர்கிற் பீரேல்,
என்றும் அவன் உறைவிடம் ஆம்; ஆதலினால்
அம்மலையை இறைஞ்சி'

என்று வியந்து மகிழ்கிறான். காடு போந்த இராமன் முதலியோர் பம்பைப் பொய்கையை அடைந்து, அதன் தோற்றத்தைக் கண்டு மகிழ்கின்றனர். அப்பொய்கையில் தாமரை மலர்கள் காட்சியளிக்கின்றன. வண்டுகள் அம்மலர்களின் மேல் தங்கி, மதுவுண்டு, களிப்பினால் முரலுகின்றன. வண்டினம் முரலும் இசை கம்பனுக்குத் தமிழிசையாகவே இனிக்கின்றது. உள்ளத்தில் எழுந்த மகிழ்ச்சிப் பெருக்கால்,

"பொன்பால் பொருவும் விரை அல்லி புல்லிப் பொலிந்த
பொலந்தாது
தன்பால் தழுவும் குழல் வண்டு, தமிழ் பாட்டு இசைக்கும்
தாமரையே!"

என்று பாடிப் பரவசமாகிறான். என்னே! கம்பனின் தமிழ்ப்பற்று! கம்பன் காலத்தில் ஏறத்தாழ 18 மொழிகள் வழங்கி வந்தன. இவ்வுண்மையை,

"ஆரியம் முதலிய பதினெண் பாடையில்,
பூரியர் ஒருவழிப் புகுந்தது ஆம் என"

என்று குறிப்பிடுகிறான். கம்பன் எம்மொழியையும் வெறுக்க வில்லை. இவன் வடசொல்லும் நன்குணர்ந்தவன். இவனது தாய் மொழிப் பற்றும், தாய் நாட்டுப் பற்றும் இவனைக் குறுகிய வட்டத்தில் அடைத்து விடவில்லை. உலகளாவிய பார்வை என்னும் போர்வையில் மறைந்து கொண்டு, தாய் மொழியையும், தாய் நாட்டையும் மறந்துவிடும் போலிகளின் குழுவைச் சார்ந் தவன் அல்லன் கம்பன்.

விரிந்த பார்வை : சமயப்பொதுமை :

கம்பன் இராமனைத் திருமாலின் கூறாகவே காண்கின் றான். இதுபற்றி இவனைக் குறுகிய வைணவன் என்றோ, புறச்சமயக் கோளரி என்றோ கூறிவிட இயலாது. சமயப் பொறை உடையவன் இவன். வைணவத்தையும், சைவத்தை யும் ஒப்ப மதித்துள்ளான். இவனது காப்பியம் முழுமையும் புறச் சமயக் காழ்ப்பு இல்லை என்றே கூறிவிடலாம். இவன் வாழ்ந்த காலத்தில் இத்தகைய சமய நடுநிலையை மேற்கொள்வது என்பது அரிய செயலாகும். மன்னர்கள் மதவாதிகளாக இருந்த காலம் இவன் காலம். பாலகாண்டத்தில் ஆற்றுப்படலத்தில் மேகத்தைப் புனைந்துரைக்கிறான் கம்பன். மேகம் வெண்ணிற முடையது. அது ஆறுகளிலும் கடலிலும் உள்ள நீரை முகந்து, மேலே சென்று, கருக்கொண்டு மழை பொழியும் நிலையில் கருமை நிறத்தை அடைகிறது. வெண்ணிற மேகத்திற்கு மேனி முழுதும் வெண்ணீறு பூசிய சிவபிரானையும், கருக்கொண்ட மேகத்திற்குக் கரிய திருமாலையும் ஒப்பிட்டுப் பாடுகிறான்.

''நீறு அணிந்த கடவுள் நிறத்த வான்
ஆறு அணிந்து சென்று, ஆர்கலிமேய்ந்து, அகில்
சேறு அணிந்த முலைத் திருமங்கை தன்
வீறு அணிந்தவன் மேனியின் மீண்டவே''

என்னும் பாடல் அறிந்து இன்புறத் தகும். அனுமன் முதலிய வானர வீரர் சீதையைத் தேடித் தென் திசைச் செல்லுங்கால் சுக்கிரீவன் வழிகூறும் முகத்தான் பேசுவதாக அமைந்த பின்வரும் பாடல் கம்பனது சமயப் பொதுமையை அங்கை நெல்லியென விளக்குவதாகும்.

''அரன் அதிகன்; உலகு அளந்த அரிஅதிகன்
என்று உரைக்கும் அறிவிலோர்க்குப்
பரகதி சென்று அடைவு அரிய பரிசே போல்''

இப்பாடல் அடிகளில் ''சிவன் பெரியவன் அல்லன், திருமாலே பெரியவன் என்று ஒருவருக்கொருவர் முரண்படப் பேசிச் சமய வெறுப்பினை வளர்ப்பவர் சிலர் உளர்; அவர் அறிவிலர்; அன்னோர் ஒருகாலும் துறக்கம் எய்தார்; இறைவனடி சேரார்" என்று தெளிவுறுத்துகிறான் கம்பன். என்னே, இவனது சமயப் பொறையுடைமை! அன்றியும், உலகில் பல்வேறு சமயங்கள் இருப்பினும், அவையெல்லாம் ஒரே பரம்பொருளைத்தான் வற்புறுத்துகின்றன என்ற சமயப் பேருண்மையை,

''தொல்லையில் ஒன்றே ஆகி, துறைதொறும், பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ்சமயம் சொல்லும் பொருளும் போல் பரந்தது அன்றே''

என்ற அடிகளில் கம்பன் தெளிவுறுத்துதல் காண்க. மேலும், சரயு நதி சோலைதோறும், காடுதோறும் பாய்கிறது என்றும், இவ்வாறு பாய்தலால் வளமுறும் இடங்கள் பலவாயினும் அதற்குக் காரணமாய் இருக்கும் ஆறு ஒன்றே என்றும் கூறுகிறான். உடல்கள் பலவாயினும் அவை எல்லாவற்றிலும் உலவும் உயிர் ஒன்றே என்பது இதன் உட்பொருள். இதனால், மக்கள் பலராயினும், பல இனத்தவராயினும், பலநாட்டவராயினும் எல்லோரிடமும் அமைந்து ஒளிரும் பரம்பொருள் ஒன்றே என்பது கம்பனது கோட்பாடு. இது இவனது ஆன்மநேய ஒருமைப்பாட்டு உணர்வையும் புலப்படுத்துவதாகும்.

இனி உயுத்தகாண்டத்தின் தொடக்கத்தில் வரும் கடவுள் வாழ்த்துப்பாடல் சிந்தனைக்கு உரியதாகும். அப்பாடல் வருமாறு:

''ஒன்றே என்னின் ஒன்றேயாம் பலவென் றுரைக்கிற் பலவேயாம்
அன்றே என்னின் அன்றேயாம் ஆமென் றுரைக்கின் ஆமேயாம்
இன்றே என்னின் இன்றேயாம் உளதென் றுரைக்கின் உளதேயாம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை நமக்கிங் கென்னோ ! பிழைப்பம்மா !''

எல்லாம் வல்ல பரம்பொருள் ஒன்றே என்பது எல்லாச் சமயங்களும் ஒப்புக்கொண்ட ஒரு கொள்கை. அப்பரம்பொருள் ஒன்றாயிருப்

யினும், உலகத்துப் பொருள்கள் பலவற்றிலும் அது நீங்காது நிறைந்து இருத்தல் பற்றிப் பல என்றும் உரைப்பர். ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திருநாமங்கள் கூறி மகிழ் வர் அடியார். அவ்வகையில் கடவுளர் பலர் என்பதற்கும் இடம் தரும். இனிச் சிலர், கடவுள் என்று ஒன்று இல்லை எனவும் வாதிப்பர். அவ்வாறு இல்லை என்று வாதிப்பவர்களுக்கும் இன்மைப்பொருளாய் (கருத்தாவாய்) விளங்குகிறான் இறைவன். இறைவன் ஒருவன் உளன் என்பார்க்கு உளன் ஆகிறான். இறைவன் இது அல்லன், இது அல்லன், இது அல்லன் என்று ஒவ்வொரு பொருளாகச் சுட்டிக் கூறின், அது அன்றேயாம்; அஃதாவது, இறைவன் நிலம் போன்று இருப்பானோ, நெருப்புப் போன்று இருப்பானோ, ஆகாயத்தைப் போன்று இருப்பானோ, என்று கேட்டால் அவன் எப்பொருள் போன்றும் இருப்பவன் அல் லன் என்று கூறத்தகும் நிலையில் இருப்பவனாதலால் ''அன்றே என்னின அன்றேயாம்'' என்றும் கூறப்பெறுவான். இனி, இறைவன் பஞ்சபூதங்களின் குணங்களாகிய பொறையுடைமை, தண்மை, தெறுதலுடைமை, பரப்புடைமை முதலியன உடையனா யிருப்பானோ என்று கேட்பின் 'ஆம்' என்று கூறுதற்கும் ஏற் புடையதாயிருத்தல் பற்றி 'ஆமே என்னின் ஆமேயாம்' என்றும் கூறப்படுவான். இக்கடவுள் வாழ்த்துப்பாடலும் கம்பன் எத்துணை விரிந்து பரந்த உள்ளம் படைத்தவன் என்பது தெற்றெனப் புலப் படும் அன்றோ? உண்மையான சமயவாதி தான் எச்சமயத்தவனா யிருப்பினும், புறச் சமயத்தவனது கருத்துக்கும் மதிப்பளிப்பான் என்பதற்கு இதனை விட வேறு சான்றும் வேண்டுமோ?

**உலகளாவிய பார்வை :**

கம்பன் தன் காப்பியத்தைத் தொடங்கும் போதே 'உலகம்' என்று தான் தொடங்குகிறான். உலகம் யாவையும் தாம் உளவாக் கலும், நிலை பெறுத்தலும், நீக்கலும் நீங்கலா அலகிலா விளை யாட்டுடையார் அவர் தலைவர்; அன்னவர்க்குச் சரண் நாங்களே என்பது கடவுள் வாழ்த்துப் பாடல். தான் இராமன் கதையை மையமாக வைத்துக் காப்பியஞ் செய்வதைப் பின்வருவோர் இகழ்ந் தாலும் இகழ்வர் என்று கூறும் கம்பன் 'வையம் என்னை இகழ வும்' என்றே பாடுகிறான்.

அன்றியும் இவன் காப்பியத்துள் தெளிக்கப் பெற்றுள்ள பல்வேறு அரசியல், பொருளியல் கருத்துகள் எல்லாம் பொதுவாக எல்லா நாடுகளுக்கும் பொருந்துவனவாகும். ஒரு நாட்டை ஆள் பவன், மக்களின் குறைகளை அவர்கள் முறையிடுவதற்கு முன்னர் தானே உணர்ந்து உரிய நேரத்தில் நீக்கி மகிழ்விப்பதில் தாயைப் போலவும், சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் நன்மை அடையும் வகையில் பலப்பல வசதிகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தித் தருவதில் தவத்தைப் போலவும், மக்கள் உடற்பிணி போக்கும் வசியும் வளனும் பெறுவதோடன்றி, உயிர்ப்பிணியும் நீங்கி ஆன்ம வளம் பெருமளவுக்கு உதவுவதில் மகனைப் போலவும், பகை களைந்து அமைதி நிலை நாட்டுவதில் நோயைப் போலவும், மக்க ளுக்கு அவ்வப்போது ஏற்படும் துன்பங்களைப் போக்கி மகிழ்ச்சி யைத் தருவதில் மருந்தைப் போலவும், அரசு பற்றியும் ஆட்சி முறைபற்றியும் மக்களிடையே சில போது குழப்பமும் சந்தேகமும் எழும்போது அவற்றைப் போக்கித் தெளிவுறச் செய்தலில் அறி வைப் போலவும் விளங்க வேண்டும் என்கிறான் கவிச்சக்கரவர்த்தி. இதனை விளக்கும்,

''தாயொக்கும் அன்பில் தவம் ஒக்கும் நலம் பயப்பில்
சேயொக்கும் முன்னின்று ஒருசெல்கதி உய்க்கும் நீரால்
நோயொக்கும் என்னின் மருந்தொக்கும் நுணங்கு கேள்வி
ஆயப்புகுங்கால் அறிவொக்கும் எவர்க்கும் அன்னான்''.

என்ற பாடல் நினைந்து நினைந்து மகிழத்தகும். தசரதனின் அரசியலை மையமாக வைத்து உலகின் பல்வேறு நாடுகளின் ஆட்சித் தலைவர்களுக்கும் வழங்கப்பட்ட அறிவுரையாகும் இது.

இன்று உலக நாடுகள் அனைத்தும் அமைதியைத் தேடி அலைகின்றன. சாந்தியும் சமாதானமும் அமைதியும் நிலவினால் தான் வளர்ச்சியும் வளமும் பெருகும். அமைதி ஏற்பட வழி யாது? இதோ கம்பன் கூறுகிறான் :

உலகில் ஒரு நாடு பிற நாடு எதனொடும் மாறுபாடும் பகை மையும் கொள்ளாது செயல்படின், உலகில் போர் நிகழாது; தனது வீரத்தையும் வலிமையையும் வெளிக்காட்டும் போரில்லையாயின் ஒரு நாட்டுக்குப் புகழ் வாராதோ என ஐயுற வேண்டா. அது பற்றி அதன் புகழ் ஒடுங்காது; ஓங்கவே செய்யும்.

போரின்மையால் ஒரு நாட்டின் படைவீரர்கள் வலி குன்றி விடமாட்டார்கள். அத்தகைய போரிலாச் சூழ்நிலை அமைந்துவிடு மாயின் ஒரு நாடு மற்றொரு நாட்டை அடியோடு அழித்து விட வேண்டுமென்று நினைக்குமோ? அத்தகைய நினைப்பே தோன்றாது. இதனை விளக்கும்,

''யாரொடும் பகை கொள்ளலன் என்றபின்
போரொடுங்கும் புகழொடுங்காது தன்
தார் ஒடுங்கல் செய்யாது அது தக்கபின்
வேரொடும் கெடல் வேண்டலுண்டாகுமோ?''

என்ற பாடல் மனங்கொள்ளத்தகும். போருக்குக் காரணம் மன மாறுபாடே ஆகும். வன்பு ஒழிந்து அன்பு மலருமானால் போர் எழுதுவதற்கு வழியில்லை. அறம் செய்வதற்குத்தான் அன்பு வேண்டும் என்பதில்லை; மறமாகிய பகையை வெல்வதற்கும் அன்புதான் சிறந்த வழி. போரினால் போரினை ஒழிக்க முடியாது. அது மற்றொரு போருக்குத்தான் வழிவகுக்கும். எனவே அன்பு வழி ஒன்றே நிலையான சாந்தியையும் அமைதியையும் தரும். இவ்வகையில் ஒரு நாட்டின் புகழ் வளருமேயன்றித் தேயாது. ''அன்பீனும் ஆர்வமுடைமை, அது ஈனும் நண்பென்னும் நாடாச் சிறப்பு'' என்ற திருக்குறளை உன்னுக.

மேலும், ஆட்சியாளன் மக்களைத் தனது உயிராக மதித்து ஆட்சிசெய்தல் வேண்டும். ஆள்கின்ற தான் அம்மக்களைத் தாங்கும் உடல் போன்றவன். அஃதாவது, ஆள்பவன் உடம்பு; ஆளப்படும் மக்கள் உயிர். உயிர் போகுமானால் உடம்பு நில்லாது; அழிந்துவிடும். அதுபோல மக்கள் நலம் பெற்று வாழ வழியில்லை என்றால் ஆட்சி நிலைக்காது; ஒழிந்து விடும். இவ்வுண்மையை நன்கு மனம்கொண்டு ஆட்சியாளர் செயல்படவேண்டும். இக் கருத்துப் பொதிந்த,

''வையம் மன்னுயி ராகவும் மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடலன்ன மன்னனுக்கு
ஐய மின்றி அறங்கட வாதருள்
மெய்யின் நின்ற பின் வேள்வியும் வேண்டுமோ?''

என்ற பாடல் சிந்தனைக்கு உரியது. அறநெறிதவறாது அருள் உள்ளம் கொண்டு ஆட்சிபுரிபவனுக்கு வேறு சிறப்புக்கள் வேண்

டுவதில்லை. அறமும், அருளும் உடைய ஆட்சிமுறையே அவனுக்கு அனைத்து மேன்மைகளையும் தரும். வேள்விகளும் விளம்பரங்களும் தேவை இல்லை.

முடியாட்சியாயினும் ஆகுக; குடியாட்சி அயினும் ஆகுக. ஆட்சி அமைப்பு வேறுபட்டால் மட்டும் சிறப்போ சிறப்பின்மையோ ஏற்பட்டு விடாது. ஆட்சியாளனின் செயல் முறையால் தான் அவன் நீடித்துப் பதவியில் இருப்பதும், பதவி இழப்பதும் அமையும். மாயத்தாலோ மந்திரத்தாலோ பிறர் உதவியாலோ நிலைத்த ஆட்சியை ஏற்படுத்திவிட முடியாது. தன்னைக் கண்டு குறை நேர வரும் குடிகளிடமும் இன்சொல் கூறுதல் வேண்டும். அது அவர்தம் குறைகளின் கடுமையைக் குறைத்துவிடும். இரக்கப்பண்பும், ஈகைக்குணமும் இன்றியமையாதன. பிறர் துன்பங் கண்டு மனம் இரங்குதலும் பொருள் முதலியன வழங்கித் துன்பம் கலைதலும் மக்களின் மனத்தில் ஆட்சியாளனுக்கு நிலையான இடத்தைப் பெற்றுத் தரும். எதனையும் ஆராய்ந்து பார்த்தபின் செயல்படவேண்டும். முன்பின் ஆராயாது எதனையும் துணிந்து செய்தல் கூடாது. ஆட்சியாளனுக்குத் தூய உள்ளம் வேண்டும். ஏமாற்றுதலும் வஞ்சம் தீர்த்தலும் கடியப்படல் வேண்டும். மேலான குணங்களும் எடுத்த காரியத்தில் வெற்றியைப் பெற்று விடும் மனமாட்சியும் வினைத்திட்பமும் ஆள்பவனுக்கு மிகவும் இன்றியமையாக் குணங்களாகும். நீதியும் நேர்மையும் தவறாமை வேண்டும். எந்த ஒரு ஆட்சியாளன் இத்தகைய அரிய பண்புகள் நிரம்பப் பெறுகிறானோ அந்த ஆட்சியாளன் மக்களால் என்றும் பாராட்டுப் பெறுபவனாகி. ஆட்சியின் நீட்சியைப் பெற்று அகம் மகிழ முடியும். இக் கருத்துக்களடங்கிய கம்பனது பாடல் வருமாறு :

''இனிய சொல்லினன்: ஈகையன்; எண்ணினன்;
வினையன்; தூயன்; விழுமியன்; வென்றியன்;
நினையும், நீதி நெறி கட வானெனில்
அனைய மன்னற்கு அழிவும் உண்டாங்கொலோ?

மற்றொரு மிக முக்கியமான பண்பு ஆட்சியாளர்க்கு வற்புறுத்தப்படுகிறது. காமம் மிகக் கொடியது. காதல் வேறு; காமம் வேறு. காதல் தூய அன்பு, அது மனைவியின்பால் காட்டப் பெறுவது. காமம் வெறி; தெறி திறம்பியது. பிறர் மனை நயத்தல்.

வரைவின் மகளிரை விரும்புதல் முதலியன நெறி கடந்த வெறிச் செயலாகும். இதனைப் பொருள் என்று கொண்டவன் கெடுவது உறுதி. தனிப்பட்டவனுக்கு வரும் கேட்டிலும், இவ்வெறி ஆட்சி யாளனிடம் தோன்றுமாயின் அதனால் வரும்கேடு சமுதாயத்தையே தலைகுனிய வைக்கும். எனவே. பொதுவாழ்வில் உள்ளோர், குறிப் பாக ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ளோர் இத்தீய பழக்கத்திற்கு ஆளானால் நாடு பாழாகும். மக்களின் பொது ஒழுக்கம் நிலை குலையும். ஆட்சியில் எதிர்பாராத தீமைகள் ஏற்படும். இதனைக் கம்பன் வலியுறுத்தும் திறம் வியக்கத்தக்கது.

> ''தூம கேது புவிக்கெனத் தோன்றிய
> வாம மேகலை மங்கைய ரால்வரும்
> காமம் இல்லை எனிற்கடும் கேடெனும்
> நாம மில்லை நரகமும் இல்லையே''.

என்பது இக்கருத்தமைந்த பாடலாகும். வால் நட்சத்திரம் தோன் றுவது பூமிக்குக் கேடு என்பர். அதுபோல் காமத்தால் மயங்கி மங்கையரில் ஒடுங்குவது சமுதாயத்திற்கும் பெருங்கேட்டினை விளைவிப்பதாகும். மேற்கண்ட அரசியற்கருத்துக்கள் வசிட்டரால் இராமனுக்கு அருளப்பட்டதெனினும், பொதுவாக உலகில் உள்ள அனைத்து ஆட்சியாளர்க்கும் பொருந்துமன்றோ?

இனி, ஆட்சியாளன் தான் உண்மையில் நேர்மையும் அற மும் உடையவனாக இருப்பினும், உலகவர் பார்வையிலும் அவன் அவர்களால் நம்பத்தகுந்த நிலையில் தோற்றமளிக்க வேண்டும். பிறர் எவ்வகையிலும் தன்பால் குறையுள்ளது என்பதனை ஊகித் தறியுமாறு நடந்து கொள்ளல் கூடாது. இது ஆட்சியாளன் மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு இன்றியமையாத பண் பாகும். ஓரிடத்தில் புகை கிளம்பினால் அங்கு நெருப்பு உண்டு என்பது உறுதி. இது காட்சியளவையால் அன்று, அநுமானத் தால் உணரப்படுவது. அதுபோல ஆள்பவனிடம் கண்கூடாகக் குறைகளைக் காண முடியாது போயினும், அனுமானத்தால் குறை யுடையவனோ என்று கருதுமளவுக்கு இடம் தருதல் கூடாது. இத்தகைய உலக நடையை உணர்ந்து ஆட்சி செய்தல் வேண்டும். வெளிப்படையாகத் தன்னுடன் நட்புப் பூண்டு உள்மனத்தில் பகைமை பாராட்டும் போலி ஆட்சியாளரிடம் மிகவும் கவனமாகவும் விழிப்பாகவும் இருத்தல் வேண்டும். தூய்மையான உள்ளத்து

டன் பழகும் நட்பரசர்பால் தூய்மையாகவும், பாவனையால்-முகத் தளவில் நட்புச் செய்து அகத்தளவில் வஞ்சகம் வளர்க்கும் மாற்றரசர்பால் தானும் அவ்வாறே வினயமாகவும் நடக்கும் சூழ்ச்சித்திறனும் வேண்டும். இது நாடு காக்கும் காவலனுக்கு இன்றியமையாதது. திருவள்ளுவரும் 'பகைநட்பாம் காலம் வருங் கால் முகம் நட்டு அகநட்பு ஒரீஇ விடல்' எனக் கூறுவர். இக் கருத்தமைந்த கம்பர் பாடல் வருமாறு:

"புகையுடைத்து என்னின் உண்டு பொங்கனல் அங்கென்றுன்னும்
மிகையுடைத்து உலகம் நூலோர் வினயமும் வேண்டற் பாற்றே
பகையுடைச் சிந்தையார்க்கும் பயனுறு பண்பிற்றீரா
நகையுடை முகத்தையாகி இன்னுரை நல்கு நாவால்"

இனி மற்றோர் அரசியல் உண்மையும் ஆட்சியாளன் மனம் கொளல் தகும். வலியவன் மெலியவனை வருத்துதல் இயல்பு. வலியவன் மற்றுமொரு வலியவன்பால் தனது வீரத்தைக் காட்டு தல் அறம். மெலியார்பால் பகைகொள்ளல் அறமன்று. கட்சி அரசியல் நடைபெறும் இன்றைய அரசியல் உலகில் இது பெரிதும் கவனிக்கத்தக்கது. ஆட்சிப் பொறுப்பேற்கும் ஒரு கட்சி பெரும் பான்மை வலிமை பெற்று விளங்கலாம். மாற்றுக் கட்சி அல்லது கட்சிகள் மிகவும் குறுகிய எண்ணிக்கையில் அமரலாம். இது பற்றித் தருக்கித் தகாத செயல்களில் வலிய கட்சி ஈடுபட்டால், அச்செயல் அதனையே காலப் போக்கில் பாதித்துவிடும். மாற்றுக் கட்சிகள் எண்ணிக்கையில் சிறியனவாயினும், எள்ளாது, இகழாது உரிய மதிப்புத் தந்து அணைத்துச் செல்லுதலே ஆட்சியாளர்க்கு நன்மை பயப்பதாகும். மாறாக, நடப்பின், எதிர்கட்சிகள் எதிர்ப்புக் கட்சிகளாக மாறிக் காலம்பார்த்துக் காத்திருந்து, அது வாய்த்த வுடன் பன்மடங்கு வேகத்துடனும், வேதனையுடனும் செயல் படும். ஆட்சியின் வீழ்ச்சிக்கும் அது காரணமாகி விடலாம். இவ் வுண்மையைக் கம்பன்,

"சிறியரென்று இகழ்ந்து நோவு செய்வன செய்யல் மற்றிந்
நெறியிகழ்ந்து யானோர் தீமை இழைத்தலால் உணர்ச்சி நீண்டு
குறியா தாம் மேனியாய் கூனியால் குவவுத்தோளாய்

வெறியன எய்தி நொய்தின் வெந்துயர்க் கடலில்
வீழ்ந்தேன்''

என்று இராமன் கூற்றாக வைத்துப் பாடியுள்ளமை சிந்தனைக்குரியது.

இனி, ஒரு நாடு எவ்வாறு விளங்குதல் வேண்டும் என்பதைக் கூறும் கம்பர் கோசல நாட்டை முன்னிறுத்திச் சில அரிய கருத்துக்களை வழங்கி உள்ளான். ஒரு நாட்டின் சிறப்பு அந்நாட்டில் வாழும் ஆடவர், பெண்டிர் என்ற இருபாலாரும் ஒழுக்கம் காத்து வாழ்வதில் அமைந்துள்ளது என்ற உண்மையைக் கம்பன்"

''ஆச லம்புரி ஐம்பொறி வாளியும்
காச லம்பு முலையவர் கண்ணெனும்
பூச லம்பு நெறியின் புறஞ்செலாக்
கோசலம்''

என்று விளக்குகிறான். ஆண்களின் ஐம்பொறிகளாகிய அம்புகளும் பெண்களின் கண்களாகிய அம்புகளும் செல்ல வேண்டிய இடத்தில் செல்லுமே அல்லாது புறஞ்செல்லா என்பது இப்பாடலின் திரண்ட பொருள். அதாவது ஆண்மகன் தன் மனையாளைத் தவிரப் பிற மாதரை நினைத்தலும் செய்யான் என்பதும், பெண் தன் கணவனைத் தவிரப் பிற ஆடவனை மனத்தாலும் நினையாள் என்பதும் இதன் விளக்கமாகும். ''எவ்வழி ஆடவர் நல்லவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே'' என்பது ஔவையார் வாக்கு.

இனி ஒரு நாட்டில் பொருளாதார நிலை நன்கு அமைதல் வேண்டும் என்பது கம்பன் கருத்து. வறுமை, பகைமை, பொய்மை வெண்மை (அறியாமை) ஆகியன ஒரு நாட்டில் தலை தூக்கக் கூடா. ஈவோரும், இரப்போரும், வீரரும், பகைவரும், உண்மையும் பொய்மையும், அறிவும் அறியாமையும் கோசல நாட்டில் நிலவின என்று சொல்லமுடியாத நிலையில் அந்நாடு சிறப்புற்று இருந்தது என்று கூறுமுகத்தால் கம்பன் பொதுவாக உலகில் எந்த ஒரு நாடும் எப்படி விளங்க வேண்டும் என்பதைக் கூறி விடுகிறான்.

''வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை நேர் செறுநர் இன்மைால்
உண்மை இல்லை பொய்யுரை இல்லாமையால்
வெண்மை இல்லை பல் கேள்வி மேவலால்''

என்பது கம்பச் சித்திரம். இவ்வாறு கம்பன் தனது காப்பியம் முழுவதும் கதை மாந்தர் வாயிலாகவும், பிற உத்திகளாலும் உலகளாவிய பார்வையை வெளிக்காட்டத் தவறவில்ல. கம்பன் காப்பியம் ஒரு கருத்துக் களஞ்சியம். அதில் அள்ள அள்ளக் குறையாத அரும் பொருட்கள் பல உள. அவற்றைப் பயன் படுத்தி வளமாக வாழலாம்.



# நூல் மதிப்புரை

டாக்டர்.

மு. அருணகிரி

*மலர் விடும் மூச்சு* (புதுக்கவிதைத் தொகுப்பு)
பத்மாவதி தாயுமானவர்; [கோமதி வெளியீடு, 16, முதல் மெயின்ரோடு, சுப்பிரமணியபுரம், மதுரை 11; பக் 88; விலை ரூ 7]

பத்மாவதி தாயுமானவர் எழுதிய மலர் விடும் மூச்சு எனும் கவிதைத் தொகுப்பு புதுக் கவிதைப் புதையல். பெண்களின் மன நிலையை, அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை, சமுதாயத்தைப் பார்க்கும் பார்வையை அழுத்தமாய் வெளியிடும் இத் தொகுப்பு. கவிஞர் மு. மேத்தா தனது வாழ்த்துரையில் கூறுவது போல 'நாடக மேடைக்குப் போகும் நடிகைகளைப் போல வேடம் போட்டுக் கொள்ளாமல், வேலைக்குப் போகும் பெண்களைப் போல' வித்தியாசமாகத் தெரிகிறது.

இக்காலத் தலைவியைச் சங்ககாலத் தலைவியோடு ஒப்பிட்டு, அதன் மூலம் இன்றையத் தலைவர்களைக் காட்டும் 'தலைவி(தி)' எனும் கவிதையில் மென்மையான அங்கதத்தொனி ஒலிக்கிறது.

இன்றைய இளைஞர்கள் பெண்கள் பின்னே சுற்றுவதையும் அவர்களது ஆற்றல் பயனற்றுப் போவதையும் கண்டு "திரைப்படம் பார்க்கப் போனது போதும் - மீண்டும் நாம் தினைப்புனம் காக்கப் புறப்படுவோம்" என்று சொல்லி, "நாம் போனால் நம் பின்னால் நாலுபேர் வரும்போது நாம் ஏன் நல்ல வழி காட்டக் கூடாது" என்று கேட்பது இவர்தம் சமுதாய உணர்வைக் காட்டுகிறது.

"துவைத்துக் கொள்ளலாம் என்று துணிந்து விடுவதற்குத் துணியல்ல — மனம் அழுக்குப்பட விடக்கூடாது" என்பது மனத்தூய்மையின் தேவையை வலியுறுத்துகிறது.

சீதாப்பழங்கள் எனும் கவிதை ஆண்டாண்டு காலமாக அறியாமையில் கிடந்த பெண்கள் 'படிப்பென்றும், பதவி மதிப்பென்றும் முட்களால் பலம் கூடிப் பவனி வரும் இன்றைய நிலையைக் காட்டுவது சிறப்புடைத்து.

சகபெண்களிடமிருந்தே பெண்களுக்கும் சுதந்திரம் இல்லை என்று 'தற்காலம்' எனும் கவிதை காட்டுகிறது. இடுப்பொடிய வேலை பார்க்கும் பெண்களுக்கு 'என்றைக்கு ஞாயிற்றுக்கிழமை' என்று கேட்பதும், 'பொழுது போதவில்லை' என்பதும் பெண் உரிமைக்கு எழுப்பப்படும் குரலாக ஒலிக்கிறது.

'ஒரு பார்வையில் கமலாதாசு மாதிரி இவருடைய கவிதைகள் பளிச்சிடுகின்றன. ஆனால் இவர் கமலா தாசு அல்ல' என்ற மேத்தாவின் கணிப்பு இவர் கவிதைகளின் தன்மையைக் காட்டும்.

நல்ல கவிதைகளின் தொகுப்பாக — பெண்களின் வாழ்வின் ஒரு கால கட்டத்தின் ஒரு முகத்தைச் சட்டமிட்டுக் காட்டுவதாய் இச் சமுதாயத்தைக் கண்டு ஆத்திரம், கோபம் கொள்வதாய் இந்நூல் உள்ளது.

**திருச்செந்திலாதிபன்** - நான்காம் தொகுப்பு

வ. முத்தையா செட்டியார், பாரதி தெரு, தேவ கோட்டை. (இலவச வெளியீடு).

திருச் செந்திலாதிபன் எனும் இந்நூல் பக்தி நெறியைப் பரப்பும் பாடல்களும், விளக்கங்களும் கொண்டது. பெரும்பாலும் திருச்செந்தூர் பற்றியும் முருகப் பெருமான் பற்றியும் கட்டுரைகளும், பாடல்களுமாக இருந்தாலும், பல்வேறு நூல்களிலிருந்து அவற்றை ஒருங்கே திரட்டித் தந்திருப்பது சிறப்பு.

கௌமாரம், காணாபத்தியம், சைவம், சாக்தம், வைணவம், சௌரம் எனும் சமயங்கள் சார்ந்த பாடல்கள் பண்டை இலக்கியங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டும், இன்றைய கவிஞர்கள் மூலமாகப் பெற்றும் வெளியிடப் பட்டுள்ளன.

கந்தர் சட்டி விரதம் முதல் அருள்மிகு ஐயப்பன் விரதம் வரையிலான பல்வகையான விரதங்கள் பற்றியும், விரதங்களின்

போது பாராயணம் செய்யும் பாடல்கள் பற்றியும் இந்நூல் தெளிவாக விளக்குகிறது.

நான்காம் தொகுப்பாக வெளிவந்திருக்கும் இந்நூலில் கடவுளரின் வண்ண ஓவியங்களும் இடம் பெற்றுள்ளன.

நல்லதொரு பாராயண நூல்!

**வள்ளுவர் படப்பிடிப்பு :** கவிஞர் சந்திரா பாரதி, திருக்குறள் பேரவை, அண்ணா நகர் மதுரை - 20. பக் 64; விலை ரூ. 5-00

மதுரை அண்ணா நகர் திருக்குறள் பேரவை சார்பாக வெளிவந்திருக்கும் வள்ளுவர் படப்பிடிப்பு எனும் நூல் சிறு குழந்தைகளுக்கும் புரியும் வண்ணம் தெரிந்தெடுக்கப்பட்ட குறள்களுக்கான விளக்கங்களைக் கொண்டுள்ளது.

இக்காலச் சூழலுக்கு ஏற்ப விளக்கங்களையும், உவமைகளையும் ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். ‘சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்?'' எனும் குறளுக்கு வரதட்சணைக் கொடுமையினைக் கொண்டு விளக்கியிருப்பது சான்று.

அறம் கொல்லும்? எனும் தலைப்பிலான கட்டுரை சிறுகதை போல அமைந்து குறள் கருத்தை எளிமையாகக் காட்டுகிறது.

அழகிய கவர்ச்சியான தலைப்புகளுடன் சிறுசிறு கட்டுரைகளைக் கொண்ட இந்நூல் படிக்க, சுவைக்க, பின்பற்ற உதவும்.

# தமிழ்ச் சங்கச் செய்திகள் :-

## மதுரைத் தமிழ்ச் சங்கத்
## தமிழ்த் தேர்வு பற்றிய செய்திகள்

*மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்றவர்கள் விவரம்*

1988-1989 ஆம் ஆண்டில் உயர் நிலை - மேல் நிலைப் பள்ளி பத்தாம் வகுப்பு - பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ்த் தேர்வில், மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்களையும், ஒவ்வொரு பள்ளியிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெற்று நூல்கள் பரிசு பெற்ற மாணவர்களையும், மதுரைத் தமிழ்ச் சங்கச் சார்பில் வாழ்த்துகிறோம். மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வில் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர் களைக் கலந்து கொள்ளச் செய்து வரும் உயர் நிலைப்பள்ளி மேல் நிலைப்பள்ளி மெட்ரிக்குலேஷன்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் தமிழாசிரியர்களுக்கும் பிற ஆசிரியர்களுக்கும் எங்களது அன்பு கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய விவரம் :

**10 - ஆம் வகுப்பு (எஸ். எஸ். எல். சி) தமிழ்த் தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விவரம் :**

| வ எண். | மாணவர் பெயரும் பள்ளி முகவரியும் | மதிப்பெண் 200க்கு | பரிசு விவரம் | பரிசுத் தொகை ரூ— |
|---|---|---|---|---|
| 1. | பி. உமா மகேஸ்வரி<br>லூர்து அன்னை மகளிர் உயர்பள்ளி, கோ. புதூர், மதுரை - 7. | 185 | முதல்பரிசு | 100-00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | க. பாண்டி<br>புனித அருளானந்தர்<br>மேல்நிலைப்பள்ளி, ஓரியூர் | 184 | இரண்டாம் பரிசு | 50-00 |
| 3. | எஸ். ஆர். செய்யது அபுதாஹிர்<br>செய்யது அம்மாள்<br>மேல்நிலைப்பள்ளி,<br>இராமநாதபுரம் | 182 | மூன்றாம் பரிசு | 15-00 |
| 4. | கா. பத்மலட்சுமி<br>அ. உ. பள்ளி, துரைப்பாடி,<br>வேலூர்-2.<br>(மூன்றாம் பரிசுத் தொகைரூ. 25/ உடன் ரூ. 5/ சேர்த்து இரு மாணவர்கட்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது) | 182 | ” | 15-00 |
| 5. | கி. மோனிகா<br>குழந்தை இயேசு உயர்நிலைப்<br>பள்ளி, முளகு மூடு. | 181 | ஆறுதல் பரிசு | 10-00 |
| 6. | ச. சங்கர நாராயணன்<br>சி. ந. ராமசாமி ராஜா மே. நி.<br>பள்ளி, ஸ்ரீ கோமதிபுரம் | 180 | ” | 10-00 |
| 7. | பி. சுரேஷ் பாபு<br>அரசு உயர்நிலைப்பள்ளி,<br>பாணாவரம் | ” | ” | 10-00 |
| 8. | ந. முனீஸ்வரி<br>திரு. எ.ல.வ. உயர்நிலைப்பள்ளி,<br>க. புதுப்பட்டி | ” | ” | 10-00 |
| 9. | ஆர். விசாலாட்சி<br>லூர்தன்னை மகளிர் உயர்நிலைப்<br>பள்ளி, கோ. புதூர், மதுரை-7 | ” | ” | 10-00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | இரா. ஆனந்தராஜ்<br>ஸ்ரீ வெங்கடேசுவரா உயர்<br>நிலைப்பள்ளி<br>அப்பநாயக்கன்பட்டி | 179 | ஆறுதல்<br>பரிசு | 10-00 |
| 11. | கே. மலர்விழி<br>என்.எல்.சி. மகளிர் மேல்நிலைப்<br>பள்ளி, நெய்வேலி-3. | 179 | " | 10-00 |
| 12. | ப. தில்லைராஜ்<br>ஜீவானந்தம் அரசு மேல்நிலைப்<br>பள்ளி, முதலியார் பேட்டை | " | " | 10-00 |
| 13. | த. வேலு மாரியப்பன்<br>புனித அருளானந்தர் மேல்<br>நிலைப்பள்ளி, ஓரியூர் | " | " | 10-00 |
| 14. | சு. சுமதி<br>மங்கையர்க்கரசி மேல்நிலைப்<br>பள்ளி, மதுரை-10. | " | " | 10-0 |
| 15. | சாந்தி மீனா<br>கேப்ரன் ஹால் மகளிர் மேல்<br>நிலைப்பள்ளி, மதுரை-10 | " | " | 10-00 |
| 16. | டி. செல்வன்<br>போப் நினைவு மேல்நிலைப்<br>பள்ளி, சாயர்புரம் | " | " | 10-00 |
| 17. | எஸ்.எ. கீதா ஸ்டெல்லா மேரி<br>திரு. இருதய பெண்கள் மேல்<br>நிலைப்பள்ளி, கீழச்சேரி | " | " | 10-00 |
| 18. | ராஜா முகமது<br>தூய சூசையப்பர் மேல்நிலைப்<br>பள்ளி, செங்கல்பட்டு | " | " | 10-00 |

## மேல்நிலைப்பள்ளி பன்னிரெண்டாம் வகுப்புத் தமிழ்த் தேர்வில் ரொக்கப்பரிசு பெற்ற மாணவர்கள் விவரம்

| வ. எண். | மாணவர் பெயர் பள்ளியின் முகவரி | மதிப்பெண் 200க்கு | பரிசு விபரம் | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | க. சித்ரா<br>பி.கே.என். மகளிர் மேல்நிலைப் பள்ளி, திருமங்கலம் | 188 | முதல் பரிசு | 100-00 |
| 2. | பி.ஏ. பஷிரா<br>தூய மரியன்னை மகளிர் மேல் நிலைப்பள்ளி, செங்கற்பட்டு | 186 | இரண்டாம் பரிசு | 50-00 |
| 3. | ஆ. கீதா லக்குமி<br>புனித பிலோமினாள் மகளிர் மேல்நிலைப்பள்ளி, திண்டிவனம் | 185 | மூன்றாம் பரிசு | 15-00 |
| 4. | ஆ. அனிதா<br>பி.கே.என் மகளிர் மேல்நிலைப் பள்ளி, திருமங்கலம்<br>(மூன்றாம் பரிசுத்தொகை ரூ.25 உடன் ரூ. 5 சேர்த்து ஒரே மதிப்பெண் பெற்ற இருமாணவர் களுக்கு சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது). | 185 | ,, | 15-00 |
| 5. | ந. பிரேமா<br>பி. கே. என். மகளிர் மேல்நிலைப்பள்ளி, திருமங்கலம் | 181 | ஆறுதல் பரிசு | 10-00 |
| 6. | பொ. மு. குமரன்<br>திரு. கிருஷ்ணசாமி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி<br>கே. கே. நகர், சென்னை-78 | 174 | ,, | 10-00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | அபியாட்ரிஸ் ஜாஸ்மின்ஜெயந்தி<br>புனித வளனார் மெட்ரிக்<br>மேல்நிலைப்பள்ளி மதுரை-9 | 174 | ஆறுதல் பரிசு | 10-00 |
| 8. | எல். நெப்ளின் புளோரிடா<br>தஸ்நேவிஸ் மாதா பெண்கள்<br>மெல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி | 173 | ” | 10-00 |
| 9. | ஜே. செல்வராஜ்<br>சங்கர் மேல்நிலைப்பள்ளி<br>சங்கர் நகர் | 173 | ” | 10-00 |
| 10. | ஜே. ராதா<br>அரசினர் மகளிர் மேல்நிலைப்<br>பள்ளி, நாமக்கல் | 173 | ” | 10-00 |
| 11. | சி. பாலசுப்பிரமணியன்<br>கலியாணசுந்தரம் மேல்நிலைப்<br>பள்ளி, தஞ்சாவூர் | 173 | ” | 10-00 |
| 12. | சி. ஆக்னஸ் எலிசபெத் மேரி<br>என். எல். சி. பெண்கள்<br>மேல்நிலைப்பள்ளி நெய்வேலி-3 | 173 | ” | 10-00 |
| 13. | ஏ. பங்காரு<br>அரசினர் ஆண்கள் மேல்நிலைப்<br>பள்ளி, தெள்ளாறு | 173 | ” | 10-00 |
| 14. | சி.தி. சுரேஷ்<br>பெத்தி செமினேர் மேல்நிலைப்<br>பள்ளி, புதுச்சேரி | 173 | ” | 10-00 |
| 15. | எம். மஞ்சுளாவதி<br>திருவள்ளுவர் அரசு பெண்கள்<br>மேல்நிலைப்பள்ளி, புதுச்சேரி | 173 | ” | 10-00 |

| | | | |
|---|---|---|---|
| 16. எம். கனகதுர்க்கா<br>புனித அந்திரேயா மகளிர்<br>மேல்நிலைப்பள்ளி<br>இராமநாதபுரம் | 173 | ஆறுதல் பரிசு | 10-00 |
| 17. மா. பத்மா<br>மங்கையர்க்கரசி மேல்நிலைப்<br>பள்ளி மதுரை-10 | 173 | ,, | 10-00 |
| 18. எஸ். பி. மெய்யம்மை<br>சி. எஸ். ஐ. பெண்கள்<br>மேல்நிலைப்பள்ளி, பசுமலை,<br>மதுரை-4 | 173 | ,, | 10-00 |

# 1989 - 90 ஆம் ஆண்டு தமிழ் தேர்வு பற்றிய அறிவிப்பு

பேரன்புடையீர், வணக்கம்

பாலவநத்தம் குருநில மன்னர் வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்கள் புகழ்பெற்ற இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தை கூடல் மாநகரில் 1901 ஆம் ஆண்டு நிறுவினார்கள் தேவரவர்கள் இந் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியதன் நோக்கம் மிக உயர்ந்த தாகும். பாண்டிய மன்னர்களால்தோற்றுவிக்கப்பட்டமுதல், இடை, கடைச் சங்கக் காலங்களில் செந்தமிழ் சிறப்புற்று விளங்கியது. அதன் வழியில் தமிழில் சிறந்த புலமை பெற்றவர்களை உருவாக்க எண்ணிய தேவரவர்கள் இந்நான்காம் தமிழ்ச் சங்கம் வாயிலாக, தமிழ்க் கல்லூரி ஒன்றை நிறுவினார். இன்றைக்குக் கவிஞர்க ளாகவும் தமிழ் அறிஞர்களாகவும் இருப்பவர்களில் பலர் இக்கல் லூரியில் தங்கி முறையாகக் கல்வி பயின்று பண்டிதம் என்னும் புலவர் பட்டத்தைப் பெற்றவர்களாவர்.

## பாண்டித்துரைத்தேவர் அவர்களுக்கு திருவுருவச்சிலை

பாண்டித்துரைச்சாமித்தேவர் அவர்கள் பழம்பெரும் மதுரை யில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவித் தமிழ் வளர்த்த தொண் டினை நினைவு கூறும் வண்ணம், அன்னாரின் திருவுருவச் சிலையை மதுரையின் மையப்பகுதியில் நிறுவி தமிழக அரசு சிறப்புச் செய்துள்ளது.

## தேர்வின் அமைப்பும், பயனும்

பொதுத்தேர்வில் மாணவர்கள் தமிழில் தோல்வி அடைந்து விடக் கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில் பாண்டித்துரைத் தேவரவர்கள் தொடங்கிய தமிழ்த்தேர்வு, கடந்த 88 ஆண்டுகளாக சிறப்புடன் செவ்வனே நடத்தப் பெற்று வருகிறது இத்தேர்வில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான உயர்நிலைப்பள்ளி, மேல் நிலைப்பள்ளி மெட்ரிக்குலேசன்பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு பெரும் பயன் பெற்று வருவதைத் தமிழ் அன்பர்கள் நன்கு அறிவார்கள்.

உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளி மெட்ரிக்குலேசன் பள்ளி மாணவர்களுக்கு அரசு வகுத்துள்ள தமிழ்ப்பாடப் பகுதிகளே தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்விற்கும் உரிய பாடப் பகுதிகளாகும். அரசு எம்முறையில் வினாக்கள் அமைத்துத் தேர்வுகள் நடத்துகின்றனவோ அம்முறையிலேயே தமிழ்ச் சங்கமும் வினாக்கள் அமைத்துத் தேர்வு நடத்தி வருகின்றது. பொதுத் தேர்விற்கு [PUBLIC EXAMINATION] முன்னதாகவே தமிழ்ச்சங்கம் தேர்வினை நடத்தி, மாணவர்களுக்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களைத் தெரிவித்து வருகின்றது. அதனால் மாணவர்கள் தங்கள் நிலையினை உணர்ந்து பொதுத் தேர்விற்கு நன்முறையில் தங்களைத் தயார் செய்து கொள்ள தமிழ்ச் சங்கத் தேர்வு வாய்ப்பளிக்கிறது.

சான்றிதழும் சிறப்புப் பரிசும் :

தமிழ்ச் சங்கத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கட்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண் அடிப்படையில் சான்றிதழ் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெறும் மாணவர்கட்குப் பரிசாக நூல்கள் வழங்கப்படுகின்றன. மாநில அளவில் முதல் மூன்று நிலையில் தேர்ச்சி பெறுபவர்களுக்கும், பாராட்டும் அளவிற்கு மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறுபவர்களுக்கும் ரொக்கப் பரிசுகள் அளிக்கப்படுகின்றன. அம்முறையில் சென்ற ஆண்டு மட்டும் நாற்பது மாணவர்களுக்குமேல் ரொக்கப் பரிசு பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். ரொக்கப் பரிசுபெற்ற மாணவர்கள் பற்றிய விவரங்கள் இந்த இதழில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்ச் சங்கச் சான்றிதழ் பெற்றிருப்பவர்களுக்குத் தனிப்பட்ட சிறப்பும், பெருமையும் என்றும் உண்டு.

தேர்வு நாள், தேர்வுக் கட்டணம் :

| | தேர்வுநாள் | — தேர்வுக் கட்டணம் |
|---|---|---|
| பத்தாம் வகுப்பு (S. S. L. C.) | 10-2-1990 | ரூ. 5.25 |
| ,, (Marticulation) | 10-2-1990 | ரூ. 5.25 |
| பன்னிரண்டாம் வகுப்பு (பொது) | 27-1-1990 | ரூ. 5.25 |
| ,, (சிறப்புத் தமிழ்) | 29-1-1990 | ரூ. 2.75 |

விடைத்தாள் திருத்துவதற்கான அன்பளிப்பு :

தமிழாசிரியர்களின் வேண்டுகோளினை அன்புடன் ஏற்று, இவ்வாண்டுமுதல் விடைத்தாள் திருத்துவதற்கான அன்பளிப்புத் தொகை ரூபாய் ஒன்றிலிருந்து ரூ. 1.25 ஆக உயர்த்தப்பட்டுள்ளதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்பு வேண்டுகோள்

தேர்வினைக் குறித்த காலத்தில் செவ்வனே நடத்திட தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை முன் கூட்டி அறிந்திட வேண்டிய கட்டாய சூழ்நிலையில் இருக்கிறோம். ஆகையால் இந்த இதழின் கடைசிப் பக்கத்தில் உங்கள் பள்ளியிலிருந்து கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தோராயமாகக் குறித்து அப்பக்கத்தினைத் தனியாக எடுத்து எங்களுக்கு அனுப்பும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் பள்ளித் தலைமையாசிரியர் அவர்கள் முகவரிக்கு (1) மாணவர் பெயர்ப் பதிவுப் பட்டியல் (2) வரவு செலவுப் பட்டியல் (3) விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர் பெயர்ப்பட்டியல் (4) கால அட்டவணை தேர்வுக் கட்டண விவரம், தேர்வுச் செலவிற்குப் பிடித்துக் கொள்ளும் தொகை விவரப்பட்டியல் முதலியன அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஏதாவது ஒரு சூழ்நிலையில் உங்கள் மாணவர்கள் இவ்வாண்டுத் தேர்வில் கலந்து கொள்ள இயலவில்லையென்றாலும் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ்ச் சங்கத் தேர்வு நடத்திட அரசு அனுமதி :

அரசு ஆணை R. Dis 166528 / 65 Dated 22 - 12- 65 என்ற ஆணையின் (G O) மூலம் மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வினை கல்வி நிலையங்களில் நடத்திக் கொள்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

சங்கத்தோடு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

செயலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625001.

இந்த நான்காம் தமிழ்ச் சங்கத்தின் நற்பணிகள் நாளும் செழிக்க உங்களுடைய ஒத்துழைப்பின் மூலம் எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும்படி சான்றோர் பெருமக்களை அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

சேதுபதி மகாராணி
த. இந்திராதேவி
தலைவர்

தங்களன்புள்ள
என். எஸ். முத்துமலைச்சாமி
செயலாளர்

படிவம் : 2

# தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை

அனுப்புநர் :

_______________________________

_______________________________

_______________________________

பெறுநர் :

செயலாளர் அவர்கள்

**மதுரைத் தமிழ்ச் சங்கம்,**

**மதுரை - 625 001.**

ஐயா,

எங்களுடைய உயர்நிலைப்பள்ளி / மேல்நிலைப்பள்ளி மாண வர்கள் நம்முடைய தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வில் தோராயமா கக் கீழே குறிப்பிட்டுள்ள விவரப்படி கலந்து கொள்வார்கள் என் பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். இந்த மாண வர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான மாணவர் பெயர்ப் பட்டியலையும், தேர்வு பற்றிய பிற குறிப்புகளையும் அனுப்பி வைக்கவும்.

விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ______

| வகுப்பு | மாணவர்களின் எண்ணிக்கை |
| --- | --- |
| பத்தாம் வகுப்பு | ________ |
| ,, மெட்ரிகுலேஷன் | ________ |
| பன்னிரண்டாம் வகுப்பு (பொது) | ________ |
| ,, (சிறப்புத்தமிழ்) | ________ |

இங்ஙனம்

நாள் :-

தலைமையாசிரியர் / தலைமைத் தமிழாசிரியர்

# மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | மதுரைத் தமிழ்ச்சங்க வரலாறு | 12-00 |
| 2. | பன்னூற்றிரட்டு | 5-00 |
| 3. | தமிழ்ச் சொல்லகராதி | 25-00 |
| 4. | மாறனலங்காரம் (பொருளணியியலுரை) | 5-00 |
| 5. | பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும் உரையும்) | 2-00 |
| 6. | குருகைமான்மியம் | 10-00 |
| 7. | டி. சி. ஸ்ரீநிவாசய்யங்கார் நினைவு மலர் | 1-00 |
| 8. | பெருந்தொகை | 15-00 |
| 9. | செந்தமிழ்த் தொகுதி அட்டவணைக் குறிப்பு | 5-00 |
| 10. | செந்தமிழ்த் தொகுப்பு (ஓர் ஆண்டு) | 10-00 |
| **11.** | **கோவை, கலம்பக நூல்கள்** | 12-00 |

1. மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும்
2. மதுரை மும்மணிக் கோவை
3. சிராமலைக்கோவை
4. கலசைக் கோவை
5. திருக்கலம்பகம் (மூலமும் உரையும்)
6. திருவருணைக் கலம்பகம்
7. குருமொழி வினாவிடை

| | | |
|---|---|---|
| **12.** | **உலா நூல்கள்** | 10-00 |

1. திருவாருருலா
2. திருச்சிறு புலியூர் உலா
3. விக்கிரம சோழனுலா
4. கடம்பர் கோவில் உலா
5. தேவையுலா
6. புலவராற்றுப்படை

| | | |
|---|---|---|
| **13.** | **பாமாலை நூல்கள்** | 12-00 |

1. திருப்பணிமாலை
2. சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை (மூலமும் உரையும்)
3. திருக்குற்றாலமாலை
4. திருப்புல்லாணிமாலை
5. திணைமாலை நூற்றைம்பது (மூலமும் உரையும்)
6. கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை
7. கலைசைச் சிலேடை வெண்பா
8. திருவாரூர் நான்மணிமாலை (மூலமும் உரையும்)

**14. இலக்கிய நூல்கள்** 12-00

1. முத்தொள்ளாயிரச் செய்யுள்
2. ஐந்திணையைம்பது
3. திருநூற்றந்தாதி (மூலமும் உரையும்)
4. பழமொழி (மூலமும் உரையும்)
5. சங்கர நயினார்கோவில் அந்தாதி
6. திருத்தணிகைத் திருவிருத்தம்
7. நான்மணிக் கடிகை (மூலமும் உரையும்)

**15. இலக்கண நூல்கள்** 5-00

1. அரும்பொருள் விளக்க நிகண்டு
2. பன்னிரு பாட்டியல்
3. அனுமான விளக்கம்

**16. மநிஷா பஞ்சகம்** 6-50

1. மநிஷா பஞ்சகம்
2. ஞானாமிர்தக் கட்டளை
3. அட்டாங்க யோகக் குறள்
4. ஞானசோதந்தம்

* * *

# செந்தமிழ்

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இவ்விதழ் ஆண்டுக்கு நான்குமுறை வெளியிடப்பெறுவது. ஆண்டுச் சந்தா ரூ. 8-00. செந்தமிழைக் கண்ணுறும் தமிழன்பர்கள் சந்தாதாரராகச் சேர்ந்து பிறரையும் சந்தாதாரராகச் சேரத்தூண்டி இதழின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

**குறிப்பு :**

1. புத்தகங்கள் வேண்டுவோர் தேவைக்கு எழுதும் பொழுது 25 விழுக்காடு முன் பணம் அனுப்ப வேண்டும். பாக்கித் தொகைக்கு நூல்கள் வி.பி.பி. மூலம் அனுப்பப்படும்.
2. விற்பனையாளர்களுக்கும், நூலகத்திற்கும் 15 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.
3. நூல்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குபவரே ஏற்க வேண்டும்.

5395

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை-1

பரணி அச்சகம் 78ஏ, தானப்ப முதலி தெரு, மதுரை-1.